# மஹாதர்மஞோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XII. Madras: September, 1910. No-9.

புத்தகம் - கஉ. சென்னப்பட்டணம்: செப்டம்பர்மீ 1910. இலக்கம்-9.

## புருடவணப் போற்றிவாழ்.

பொருள் என்பது மாந்தரால் இம்மைக்குவேண்டிய சுகத்தினைக்கருதி ஈட்டி வைக்கப்பெறுவதாகிய வோர் சாதனம். அது பொன் மணிமுதல் துரும்பு ஈருக அன்னோர்க்கு உறுதிபயப்ப தவ்வளவையுமடக்கி நிற்கும். இதனை இவ்வுலகத்தில் தேடியலைவோர் அனந்தம். கூட்டிக் குவிப்போர் கோடி. எனினும் இதன் மகிமையைச் செவ்வனேயறிந்து நன்குபட வழங்குவோர் சுருக்கமாகவே யிருத்தல்வேண்டும். ஏனெனில், பொருளதிகரிப்பின் அது பொருள் மதமெனுமோர் இருமாப்பை உண்டாக்கி விடுகின்றது. அதனைத்தப்பிவிப்பவர் வெகுசிறியதொகையேயாவர். இதனால்தான் பெரும்பாலும் மூன்று நான்கு தலைமுறைக்கு மேலும் நீடிய பரம்பரைச் செல்வரை நாம் காணுதலரிதாகியிருக்கின்றது.

"பொருடனை ஈட்டலுந்துன்பம் ஈட்டிய பொருளைக்காத்தலும் துன்பம்" என்று வழக்கத்தில் சொல்லிக்கொள்வதுண்டு. காத்தலென்பது கள்வர் திருடரிடமிருந்து காப்பது மட்டுமன்று. தன்னின்றே புறப்படும் அழிவினின்று காத்தலுமாகும். இதனையே போற்றுதல் என்றுஞ் சொல்வர். இதை முக்கியமாக யாவருங்கவனிக்கவேண்டியது. ஏனெனில், பொருளைத் தேடுவதினும் அதனைப்போற்றி வாழ்வதே மிகுந்த அரிய செயலென்னும் உண்மையை, நம் அனுபவத்தில் அநேக தனவான்கள் தோன்றியும் நொடியில் தம்மையறியாமல் மறைய வேற்படுவதன்மூலமாக அறிகின்றோம்.

"இல்லாரை யெல்லாரும் எள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு"

என்றவாக்குப்பொய்யாவாக்கன்றோ! பொருளில்லாதவன்பிணம். கைப்பொருளில்லானைக் கைப்பிடித்த இல்லாளும்மதியாள். ஈன்றதாயும்மதியாள். அவன் கற்ற கல்வியும் பிரயோஜனப்படாது. சொல்லுஞ் சுவையற்றுப் போம். இதைச் சுட்டியே நாயனாரும் ஒருவரியிலே,

“அருளில்லார்க் கவ்வுலகமில்லை.
பொருளில்லார்க், கிவ்வுலக மில்லாதியாங்கு.”

என்று சொல்லிப்போந்தனர். இவ்வுலக இன்பமே அவருக்குக்கிடையாது· அறமில்லை. திறமில்லை. அருளில்லை. ஒன்றுமே இல்லாது உழல்வதே கதியாகும். ஆனால், பொருள் கைவசம் உண்டானாலோ இக சுகமட்டுமன்று. பரசுகமுந் தேடித்தரும்.

“அருளென்னும் அன்பு ஈன்குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு.”

அதுவே செவிலித்தாயாக நின்று, அருளையும் வளர்க்கு மென்பது பெறப்பட்டது.

இத்தகைய மாண்பு பொருளுக்கு அமைந்து கிடப்பதுபற்றி அதனை ஒவ்வொருவருந்தேட முயலுவதுடன், தேடியடைந்தபின்னும் மிதமாகச் செலவுசெய்ய முயலுதலும் வேண்டும். அநேகமாய்ச் செல்வக்குடும்பங்களில் பிறந்தவருக்கு இதன் அவசியம் புலப்படுவதில்லை. நிழலருமை வெயிலில் நடந்தவருக்கன்றோ நன்குதெரியும்? ஆதலின் அவர் முன்னோர் சேமித்துவைத்த பொருளைப்பல்வாறுந் துர்வழிகளிற் பிரயோகஞ்செய்து, சடுதியில் அழிவையுங் கேட்டையு மொருங்கேயடைந்து துயருக்காளாகின்றனர். இன்னுஞ்சிலர் பொருள் தமக்குமட்டுமே உரித்தாயதென்றும், எத்துணை அதனை அனுபவஞ்செயதல் கூடுமோ அத்துணையுஞ் செய்தே தீரவேண்டுமெனவுங் கருதிச் செய்வதியாதெனத் தெரியாதுழன்று கஷ்டத்தை யடைகின்றனர். இன்னுஞ்சிலரோ, இதுவுமதுவுமன்றி, யீட்டியபொருளைத் தேனீக்களையொப்ப வெவ்விதமான அனுபவந் தாமுஞ்செய்யாது, மற்றோரையுஞ் செய்யவிடாது‘ வைக்கோல்போரைக் காத்துக்கிடந்த நாய்போலத் தமக்கும் பிறருக்குந் துன்பத்தை விளைவித்துக்கொள்கின்றனர். இவையெல்லாம் நன்னெறிகளாக மாட்டாது. அபரிமிதமான சுகத்தைத்தேடுதலும் பிசகு. அதுபோலவே பொருளைப் பூட்டிவைத்துப் பூதம்போல் காத்து நிற்றலும் மடமை. பொருள் படைத்தவர் இனிச் செய்யவேண்டிய தியாதெனில், அருள் சுரப்பதும், தமக்குப்போலவே பிறருக்கும் இதத்தை விளைவிப்பதும் கைப்பொருளை நல்வழியிலேயே மென்மேலும் விருத்தியடையச் செய்வதுமான வழிகளைத்தேடி, அவ்வழிகளிலே தம்பொருளைச் செலுத்திப் பொருளின் பயனையும் அருளின் பெருக்கையும் ஒருங்கே அடைதல்வேண்டும். சதாவும், தம்வசமுள்ள பொருளுக்கும் அதனைச் செலவுசெய்த விபரத்துக்கும், பகவானொருவருக்குக் கணக்குக்கொடுத்தல் வேண்டு மென்னுமோரெண்ணம் உளத்தில் பதிந்து கிடக்குமேல், அவ்வொன்றுமே நஞ்செயல்களைச் செவ்வைப்படுத்து மென்பதிற் சந்தேகமில்லை.

இனி இந்தப்பாகத்தைச் சற்று நிறுத்தி, இது விஷயமாய் ஸ்திரீகள் செய்து கொள்ளுவதென்ன விருக்கிறதென்பதைப்பற்றி யோசிக்கப் புகுவோம். நம்மிந்தியா தேசத்திலே பொதுவாய் அவர் பொருள் தேடுவதில் அதிகச் சிரத்தை யெடுத்துக்கொள்ள வேண்டுமென்றாலும் அதற்கு வழியில்லை. மேலும் அது நம் விஷயத்திற்கும் புறம்பு. ஆனால் தேடிவைத்திருக்

கும் பொருளை நல்வழிகளிற் செலுத்தவாகிலும் அவராலியையுமோவென்று நோக்கில், புருடரினும் இக்காரியத்தை முடித்தற்கு இவரே சாலச்சிறந்தவரென்பது தெளிவாய்ப் புலப்படும். யார் யார் என்னென்ன புகலினும், எவர் மறுப்பினும் குடும்பந்தவறாமல், ஆஸ்தியைத் தேடற்குங் கோடற்கும், பெண்களே காரணமாக இருந்திருக்கிறார்களென்பது ஆழ்ந்து நோக்குவார் அனைவருக்கும் அகப்படும் விஷயமேயாகும். 'மலையிலே விளைந்தாலும் உரலிலே வந்துதானே இடிபடவேண்டும்" என்னுமாப்போல் எவர் தேடினும் அவர் கைவழியேயன்றி வேறுவழியிற் பொருள் செல்லுதற்கிடமில்லை. ஒவ்வொரு ஸ்திரீயுந் தன்னில்லத்தைச் செவ்விதிற்செலுத்தி, வருவாய்க்கொப்பச் செலவுசெய்து, "மலைபோலப் பொன்னிருப்பினுஞ் செதுக்கியுண்ணக் காணாது" என்னும் மூதுரையை நெஞ்சிலிருத்தித், தன் நாயகனையும் மிகைப்படின் வழிக்கொணர்ந்து, வீணில் பொருளை யழிக்காமல், தருமமியற்றித், தனக்குப்புடவை, உருட்டிய பொன்மணிகளாலாகிய வாபரணங்களிலவைகளைச் சற்று மறந்து, அவற்றினை மற்ற நல்வழிகளிற் புகட்டி, நாளைவருவதை இன்றுணர்ந்து—நடபபளேல், எந்தக் கிரகந்தான் செழிக்காது? உலகத்தில் துன்பமென்பதும் இடுக்கணென்பதும் எத்துணைத்தூரம் ஓடியொளிக்காது? என்றுதான் இந்நிலை நமக்கு வாய்க்குமோ அறியோம்!

இங்கிலாந்துதேசத்திலே முன்னிருந்த ஓர்கவிசிரேஷ்டர் (Goldsmith) ஓரிடத்தில், "உலகத்தில் பிரபுக்கள் வீட்டு ஸ்திரீகளணியும் உடுப்புகளின் வெட்டியதுண்டுகளை யெல்லாம் சேர்க்கின், தரித்திராய்நிற்கும் கோடிக்கணக்கானவருக்கும் உய்யப்போதுமான பொருள்காணும்" என்று கூறியிருக்கிறார். அந்தத்தேசத்தில் தையலுடுப்புகளுக் கவ்விதமென்றால், நம்தேசத்துக்கு அத்துடன் ஆபரணங்களையுஞ் சேர்க்கலாமே. கேவலம் ரூபா மூந்நூறு முதல் ஐம்பதினாயிரம் வரை ஒவ்வொரு பெண்மணியும் சுமையணிவதென்றால் கூட்டிப்பார்ப்போர் கண்ணுங்கூசாதா? முதலென்ன? வட்டியென்ன? எத்தனை வியாபாரங்களுக்குப் போதுமான திரவியம்! எத்தனை கைத்தொழிலுக்கேற்ற சாதனம்! அத்தனையும் காட்டிற்பெய்த நிலவாகவும் கடலிற்கரைத்த புளியாகவும் பயனற்று நிற்பது மிக்கப்பரிதாபமே.

இதையிட்டு, ஏதோ ஸ்திரீகள் நகைகள் அணிந்துகொள்வதில் புருடர் பிரியமற்றவர் என்று கொள்ளல் கூடாது. ஒழுக்கமென்பதை யுடுத்துக் கல்வியையணிந்து பொலிவதே அன்னாருக்கழகு செய்யும். "யாரே அழகுக்கழகுசெய்வார்" என்பதுபோல, அவருக்கியற்கை யழகே இங்ஙனம் அமைந்து கிடப்பின் செயற்கை யழகைத்தேடலும் வேண்டுமோ? அங்ஙனந்தேடுவது சூரியப்பிரகாசத்துக்குத் தீவர்த்தியின் உதவியை நாடிநின்றவர் மதியையன்றோ நிகர்க்கும்!

ஆதலின் "அளவறிந்தளித்துண்" என்னுஞ் சீரியவாக்கை எஞ்ஞான்றும் மறவாது, இல்லக்கிழத்தியராயும் சுவதந்திரராயும் விளங்கும் ஒவ்வொருவரும், ஆடவரைப்போலவே, தாமும் பொருளைப்போற்றி நின்று, அதனால் நன்மை இகபர மிரண்டிற்குந் தேடுதல் கூடுமென்பதை யுணர்ந்து, தாம் நல்வழிப் படுதலோடு தம் ஆடவரையும் நல்வழிப்படுத்தி நிற்றல்வேண்டும்.

இங்ஙனம் ஒவ்வொருவருஞ் செய்யத்துணிவரேல், துன்பமென்பதும் தரித்திரமென்பதும் உலகினை விட்டோடிப்போமென்பதிலியாதொரு ஐயமுமில்லை. இதனை ஒவ்வொருவரும் நன்கு கவனித்து ஒழுகுவாராகவும்.

☞ வி. எம். கலியாணசுந்திரம், பி-ஏ.

# கம்பளிப்பூச்சியைப்பற்றிய குறிப்பு.

தமிழ் ஜில்லாக்களில் "கம்பளிப்பூச்சி" என்று சொல்லுகிற மயிருள்ள புழுக்கள் பயிரைச் சேதப்படுத்தும் ஜெந்துக்களென்று தென்னிந்தியாவிலுள்ள எல்லாருக்கும்தெரியும். மழைக்காலததில் திடீரென்று உண்டாய் வெள்ளாமைகளுக்கு அதிக கெடுதிசெய்கிறது. அவைகள் சோளம், கம்பு, நிலக்கடலை, பயறுவகைகள் இவைகளைத்தான் விசேஷமாய் அழித்துவிடுகின்றன.

இந்தக்கம்பளிப் பூச்சிகள் பயிர்களைத் தின்றபின் மண்ணுக்குள் நுழைந்துகொண்டு பேரீச்சங்கொட்டையைப்போல் உருமாறி மறுவருஷம் மழைகாலம் வரும்வரையில் அந்தப்படியே (மண்ணுக்குள்) கிடக்கும். மழைகாலம் ஆரம்பித்து தரை போதுமானபடி நனைந்ததும் இந்தப்பூச்சிகள்மேல் நோக்கித் துளைத்துக்கொண்டு தரைமட்டத்துக்கு வந்து, பொட்டுப்பொட்டாயிருக்கும் சிறகுகளுடனும் மஞ்சள் அல்லது சிவப்பு வரிகளுள்ள உடம்போடுகூடிய வெள்ளைப்பூச்சிகளாக வெளிக்கிளம்புகின்றன. இந்தப்பூச்சிகள் சாதாரணமாய் கொள்ளை கொள்ளையாய் ஒரேதடவையில் ஒருமிக்கக் கிளம்புகின்றன. அப்போது கிராமாந்தரங்களில் விளக்கைச்சுற்றிலும் இவைகள் கூட்டமாய்த் திரண்டுகொண்டிருப்பதைப் பார்க்கலாம். பெட்டைப்பூச்சிகள் இலைகளில் அநேக முட்டைகளிடுகின்றன. கம்பு,சோளம்,நிலக்கடலை இவைகளின் இலைகளின் கீழ்ப்பக்கத்தில் திரள் திரளாய் முட்டைகளிருக்கக் காணலாம். இந்த முட்டைகள் பொரிந்து பின் கம்பளிப்பூச்சிகளாகும்.

இதற்குப் பரிகாரமான உபாயங்கள்:—இந்தப் பூச்சிகள் முட்டையிடுவதால் தான் திடீரென்று புழுக்கள் உற்பத்தியாகின்றன. ஒரு பூச்சி 500-முதல் 1,200 முட்டைவரையிலும் இடும். ஆகையால் ஒருபூச்சியைக் கொன்றால் பின்னிட்டு 500-முதல் 1200-புழுக்கள் வரையிலும் கொன்றதுபோலாகும். நல்ல மழைபெய்து தரை தக்கபடி நனைந்ததும் கூடுகளிலிருந்து நூற்றுக்கணக்காய் பூச்சிகள் புறப்படுகின்றன. இந்தப் பூச்சிகளுக்கு விளக்கண்டை வந்து சேர அதிக ஆவல். இந்தப் புழுக்களின் தொந்திரவுள்ள இடங்களில் சமயம் பார்த்து விளக்குப் பொறிகளை வைத்தால் இந்தப் பூச்சிகளை ஒருமிக்கத் தொலைத்துவிடலாம்.

விளக்குப்பொறி என்பது விளக்கண்டை வரும்பூச்சிகளை தானாகக்கொல்லும் ஒரு சூத்திரம். இச்சூத்திரம் பூச்சிகளை இழுக்கிறதற்கு விளக்கொன்றும், அதன்கீழ் வந்த பூங்சிகளைக்கொல்ல மண்ணெண்ணெய் கலந்த தண்ணீருள்ள தட்டம் ஒன்றும் சேர்ந்து அமைந்துள்ளது. ஒரு சிறு மண்ணெண்ணெய் விளக்கு உள்ளே வைக்கக்கூடிய நான்கு மூலைக்கண்ணாடி லாந்தரை வைத்துக்கொண்டு விளக்குப்பொறி செய்துவிடலாம். இதன்விலை சொற்பம். இது எல்லா ஊர்களிலும் சுமார் 6-அணாவுக்கு வாங்கலாம். தேங்காய் எண்ணெய் பாதி மண்ணெண்ணெயை விட இந்தக் கலப்பு பிரகாசமாய் எரியும். புகையும் பிடியாது. பூச்சிகளைப் பிடிப்பதற்கான மண்ணெண்ணெய் கலந்த தண்ணீரின்விஸ்தீரணம் அதிகமாய் இருக்கும்படி தட்டம் அகன்று இருக்கவேண்டியது அவசியம். 2½-முதல் 3-அங்குலம்ஆழமும் இரண்டடி சதுரமும் உள்ள ஒரு தகரத்தட்டம் இதற்குஏற்றதென்று அநுபோகத்தில் தெரிந்திருக்கிறது. 6-அல்லது 8-அணாவுக்கு எந்த தகரக்கடைக்காரனும் செய்துகொடுப்

பான். இதில்லாவிட்டால் ஏற்றச்சால்போல் அகன்றவாயுள்ள எந்தப்பாத்திரமும் இதற்கு உதவும்.

தனியாக ஒரு மூங்கில் கால் நட்டு அதிலிருந்து தட்டத்திற்கு மேலே லாந்தரை தொங்கவிடவேண்டியது. ஆழமில்லாத பாத்திரமாயிருந்தால்அதன் நடுவில் ஒரு கல்வைத்து அந்தக்கல்லின்மேல் லாந்தரைவைத்துவிடலாம். எந்தப் பயிரைகாக்க இந்த ஏற்பாடு செய்கிறோமோ அந்தப்பயிர் மட்டத்திற்கு மேல் இந்த கருவி முழுதும் உயர்ந்து இருக்கவேண்டும். தூரத்திலிருந்து பார்த்தால் விளக்குத்தெரியும்படி ஒரு மண்குவியலின்மேல் வைக்கலாம்.

விளக்குப்பொறிச்சோதனைகள்:—இந்த உபாயம்பலிக்கிறதா என்பதை சோதித்தறியும்பொருட்டு 1909-ம்௵ ஜுலை ஆகஸ்டு மாதங்களில் மஞ்சக்குப்பஞ் ஜில்லாவிலிருக்கிற பன்னிக்குப்பம் கிராமத்து நிலங்களில் 15-விளக்குப் பொறி வைத்திருந்தது. முதலில் ஒரு சிறு கூட்டம் முந்தியநாள் பெய்த 1-அங்குல மழைக்கப்புறம் ஜுலை௴ 24௳ இரவிலும், பிறகு அதிலும் மிகப் பெரியகும்பல் ஆகஸ்டு௴ 8௳ பெய்த $1\frac{1}{2}$ அங்குல மழைக்குப்பின் 10௳ சாயந்தரமும் ஆக இரண்டு வெவ்வேறு கும்பலாக அவ்வருஷம் இப்பூச்சிகள் புறப்பட்டன. முதற்கூட்டமோ கொஞ்சம் 400 - பூச்சிகள் தான் 4-ராத்திரியில் பிடிபட்டன. இரண்டாவது கும்பலில் நாலிரவில் 7,400 பூச்சிகள் பட்டிறந்தன. அதில் 3,800-முதனாளிரவிலேயே பிடிபட்டன. இந்த 7400-பூச்சிகளில் குறைந்தபக்ஷம் அரைவாசி பெட்டைகளா யிருக்கவேண்டும். ஒருபெட்டை 500-முதல் 1,200-முட்டைகள்வரை யிடுகிறதென்பதை யோசித்துப் பார்க்கும்போது இந்தப்பொறி எவ்வளவு சிறந்ததென்பது தெளிவாய் நாம் காண்கிறோம். (இந்தஉபாயத்தால்) தப்புவிக்கப்பட்ட நிலங்களுக்கருகில் ஒரு பூச்சிகூட காணாததினாலே பன்னிக்குப் பங்கிராத்துக் குடியானவர்கள் இது ஒருகைகண்டமுறை என்றுசெவ்வையாய் அறிந்துகொண்டார்கள். முடிவு:—இந்த தந்திரத்தினால் பூரண நன்மையடையவேண்டுமானால் ஒரு கிராமத்திலிருக்கும் இரண்டொரு குடியானவர்கள்மட்டும் தங்கள் நிலங்களில் விளக்குப்பொறிகளை வைத்தால் போதாது. அப்படிச்செய்வதினால் அந்தப் புலங்களிலும் அவைகளுக்கடுத்த புலங்களிலும் உள்ள பூச்சிகள் தப்பாமல் பிடிபட்டிறக்கும் என்றாலும், இந்த விளக்குப்பொறிகளுக்கு எட்டாத தூரத்திலுள்ள மற்றப் புலங்களிலிடப்பட்டிருக்கும் முட்டைகள் பொரித்த புழுக்கள் கடைசியில் இங்கும்வந்துசேர்ந்துவிடும். ஆகையால் ஒரு இடத்திலுள்ள எல்லாகுடிகளும் ஏகோபித்து கொல்லைகளெங்கும் விளக்குப் பொறிகளை கட்டாயம் நடவேண்டும். இப்படி எல்லாரும் ஒருமித்துச் செய்வதால் இந்த உபாதையை வரவொட்டாமல் தடுக்கமுடியும் என்று நம்பலாம். ஒன்று சேராமல் போனாலோ இப்பொறிகளெல்லாம் கேலிக்குத்தான் இடமாகும். கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால் (முதல்) மழைபெய்துநின்ற உடனே விளக்கு ஏற்றிவிடவேண்டும். முதனாளிரவு பிடிபடும் பூச்சிகளின்தொகை பின்னிட்டுப்பிடிபடும் பூச்சிகளெல்லாவற்றையும் விட அதிகமாயிருக்கும். ஆணும் பெண்ணும் சேர்ந்த பின்னிட்டு விளக்கண்டை பூச்சிகள் ஆவலோடு விசேஷமாய் வருகிறதில்லை. இந்த உபாயம் கைகூடவேண்டுமானால் (மழை நின்றவுடனே) சற்றும் தாமதம் செய்யாமல் விளக்குப் பொறிகளை வைத்துவிடவேண்டியது அவசியம்.

விளக்குப் பொறிவைத்தல்:—செலவு சுருக்கமான விஷயம் அதற்கு வேண்டிய கைம்முதல் ஒரு ரூபாய்க்கு மேலில்லை. லாந்தர் 6-அணா. தகரத்

தட்டம் உபயோகிப்பதானல் அது ஒரு 6-அல்லது 8-அணு. மூங்கில்கால் சட்டம் வகைராவுக்கு ஒன்று அல்லது இரண்டணுவுக்கு மேல் செல்லாது. பத்திரமாய் வைத்துக்கொண்டால் பல வருஷமிருக்கும். ஒரு ராத்திரிக்கு ஒரு விளக்கு 6-அல்லது 8-பைசா எண்ணெய் செல்லும். மொத்தத்தில் இரண்டு வாரத்துக்கு மேல் விளக்கு வைக்கவேண்டியிராது. ஆனதினலே எண்ணெய்ச் செலவு சுமார் 8-அணு பிடிக்கும் (இந்தக்கம்பளிப்பூச்சிகளால் விளைகிற நஷ்டத்தை பார்த்தாலோ) அரைவாசி முக்கால்வாசி பயிரைச் சேதப்படுத்தி நிலத்தின் நயத்திற்கும் பயிரின் உயர்த்திக்கும் தக்கபடி ஏகர் ஒன்றுக்கு 20-ரூபாய் முதல் 50-ரூபாய் வரையில் நஷ்டம் உண்டாகிறது.

## புருடவேடமணிந்த ஸ்திரீகள்.

மிஸ்ஸஸ் எலினஸ்மித் என்ற அமெரிக்கா தேசத்து மாது சபதம் செய்து ஐந்துவருஷம் எவரும் தன்னை ஸ்திரீ என்று எண்ணுமல் ஆண்வேடம் தரித்துக்கொண்டு காலங்கழித்து வந்தாளாம். இவ்விதமே அநேகஸ்திரீகள் ஆண்வேடம்தரித்துக்கொண்டு அதாவதுநிஜார், அங்கிமுதலியவைகளைப் புருடர்களைப்போல் அணிந்துகொண்டு காலங்கழித்துவந்ததாகத் தெரிகிறது.

அமெரிக்கவில் வைத்தியத்தில் பேர்பெற்ற டாக்டர் மெரிவாக்கர் என்ற மாது ஆண்வேடம் தரித்துக்கொள்வதில் மிக ஆவல்கொண்டு அவ்விதமே ஆண் உடையை யணிந்து வந்தாளாம். சாராபர்ன்ஹார்ட் என்றமாதும் மனிதரைப் போலவே உடைகளை யணிந்து வந்தாளாம். ஆனல் தமது வீட்டிலேயே கல்சதுக்கும்வேலையைச் செய்யும்பொழுதுதான் இவ்விதம் செய்து வந்தாளாம். ஒரு சமயத்தில் பாரிஸ்நகரத்தில் நாடகம் நடிப்பதில் மிகச்சிறந்த மாது ஒருத்தி ஆண்வேடம் தரித்துக்கொண்டு தெருக்களில் சென்றபொழுது இவளுக்கு கூச்சம்மாத்திரம் உண்டானதாம். ஆனல் ஒருவரும் இவள் ஸ்திரீயென்று கண்டுபிடிக்க வில்லை.

பிரான்சு தேசத்திய மாது ஒருவள் ஸ்திரீகள் அணியும் ஆடையை வெறுத்து புருடஆடையை அணிந்துவர கோர்ட் மூலமாக உத்திரவுபெற்று அவ்விதமே செய்துவருகிருள். இம்மாது பத்திரிசிரியராகவும், சிறந்த கதைகள் எழுதுவதில் மிகுந்த சாமார்த்திய முள்ளவராகவு மிருக்கிருளாம். இவ்வித வேடத்தால் அவள் வேலையை வெகு நன்ருகச்செய்கிருளாம். அவளைக் காணும் ஜனங்கள் அவளை ஒருகனவான் என்று சொல்லுவார்களே யொழிய ஒருமாதுஎன்று சொல்லமாட்டார்களாம். அமெரிக்காவில் ஸ்திரீகள் குதிரைசவாரி மற்றதேசத்து ஸ்திரீகளைவிட அதிகம் செய்கிருர்களாம். அச்சமயத்தில் புருடர்கள் அணியும் அரைச்சல்லடத்தை யணிந்துகொண்டு சவாரி செய்கிருர்களென சொல்லப்படுகிறது. ஆங்கிலேய மாதர்களில் ஆண்வேடம்தரிப்பதில் கீர்த்திபெற்ற மாது ரிச்சர்ட்சன் என்பவளே டெக்சாஸ், கோமாலி லேண்ட் முதலிய பிரதேசங்களில் பிரயாணம் செய்தபொழுது நிஜார், அங்கி, இடைப்பையன் அணியும்தொப்பி முதலியவைகளை உடுத்திக்கொண்டு குதிரை சவாரி செய்தாள். அப்பொழுது ஒரு இடைப்பையன் இம்மாதைப்பார்த்து "இவள் மனிதனகத்தா னிருக்கவேண்டும். மனிதனை விட வெகு நன்ருக குதிரை சவாரி செய்கிருள்" என்ருனும். சாதாரணமாக

வேட்டையாடுவதிலும், மலையேறுவதிலும் ஆண் உடை தான் மிக அனுகூல மாயிருக்கும். ஆகையால் ஆங்கில மாதர்கள் பற்பலதேசங்களைக் கண்டு அங்குள்ள விசேஷங்களைப் பரிசோதித்தறியச் செல்லும்போது சாதாரணமாய் ஆண் உடை தரித்துக்கொண்டே செல்லுகின்றார்கள். இவ்விதம் பிரயாணஞ் செய்வதில் பேர்பெற்ற மிஸ்ஸஸ் எல்ல உக்மன் என்ற மாது எஸ்கிமோ என்ற சாதியாரிருக்கும் இடங்களில் பிரயாணஞ் செய்தபொழுது இவளைப் புருடனென்று மதித்தார்களாம். எஸ்கிமோ சாதியார் புருடர்களை நம்புவது போல ஸ்திரீகளை நம்புவது கிடையாது. பயமில்லாத தலைவன் ஸ்திரீ சாதியென்று அவர்களுக்குத் தெரிந்துவிட்டால், அவளைப் பின்தொடர மறுதளித்து விடுவார்களாம். தனக்கு வேலைசெய்யவும், வழிகாட்டவும் ஆட்கள் வேண்டுமல்லவா ? இதற்காக ஆண்வேடம் தரித்துச் சென்றாளாம்.

அமெரிக்காவில் நியூயார்க்கில் மாதர் சங்க மொன்றிருந்ததாம். இப்பொழுது அதிருப்பது தெரியாதாம். அதிலுள்ள ஸ்திரீகள் நிஜார் முதலியவைகளை யணிந்துகொண்டு கம்பீரமாக புருடர்களைப்போல் சங்கத்தில் உட்கார்ந்து பேசுவார்களாம். இதில் அநேக நாடகம் ஆடும் பெண்மணிகள் ஆண் வேடம் தரித்து வந்தால் புருடர்கள்கூட கண்டு அதிசயிப்பார்களாம். ஒரு சமயத்தில் இங்கு ஆண்வேடம் தரித்துக்கொள்வதில் கைதேர்ந்த மாது ஒருவள் இச்சங்கத்தில் சேர்ந்தாளாம். அப்பொழுது அங்கொரு சுவரில் இவ்விதம் ஆடை தரித்துக்கொள்பவர்கள் பாக்கியவான்களென்று வரையப்பட்டிருந்ததைக்கண்டுகளித்தாளாம். கஸ்கார் லோடிமான்ஸ்பீல்ட் என்ற மாது அநேக பிரதேசங்களுக்குப் பயமின்றி யாத்திரை செய்திருக்கிறாளாம். அம்மாது அச்சமயங்களில் ஆண்வேடம் பூண்டே வந்ததாகத்தெரிகிறது.

ஆனால் ஸ்திரீகள் நம்தேசத்தில் ஆண்வேடம் தரிப்பது உசிதமல்ல, ஸ்திரீகள் ஸ்திரீகளே. அவர்களுக்குரிய நடை, உடை, பாவனை முதலியவைகள் தான் எப்பொழுதும் சிறப்பாக ஓங்கி வளரும். ஆண்வேடம் தரிப்பதால் யாதொரு மகிமையுமுண்டாகாது. அபகீர்த்தி வேண்டுமானால் உண்டாகும்.

---

## புனவில் சேவசாதன் என்ற ஸ்திரீ சங்கம்.

பெயர்போன திருத்தக்காரரான மிஸ்டர் மலபாரி, சில காலத்துக்கு முன்னால் பம்பாய்ப் பட்டணத்தில் "சேவசாதன்" என்கிற ஒரு ஸ்திரீ சங்கத்தை ஸ்தாபித்தார். அதன் நோக்கம் என்னவென்றால், நமது ஸ்திரீகளை அதில் சேர்த்துக் கல்வி கற்பித்தும் வேறுவிதமாய்ச் சகாயம் செய்தும் பொது நன்மைக்கு உழைக்கக்கூடியவர்களாக்குவது. இந்தச் சங்கம் பம்பாயில் நல்ல காரியம் செய்து வருவதைப் பார்த்துப் புனவிலுள்ள சிலஹிந்து ஸ்திரீகள் அங்கு ஒரு கிளைச்சங்கம் ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்தக் கிளைச்சங்கம் சென்ற மாதம் கூடினபோது, லேடி மூர் மெக்கன்ஸி என்ற ஓர் ஆங்கிலேய மாது ஒரு சிறு பிரசங்கம் செய்தார். இவர் பம்பாய்க் கவர்ன்மெண்டில் ஒரு மெம்பராயிருந்து பென்ஷன் பெற்று விலகப்போகிற ஸர்ஜான் மூர் மெக்கன்ஸியின் மனைவி. தாம் இந்தத் தேசத்தில் தமது புருஷரோடு அநேக வருஷம் வசித்துவந்து இந்திய ஸ்திரீகளிடத்தில் அனுதாபமும் அன்பும் பாராட்டி வருவதாகவும் இப்போது தாம் ஜன்மதேசத்துக்குப் போகும் சமயமாயிருப்பதால் தாம் அந்தக் கூட்டத்தில் வந்து பேசத் தருணங் கிடைத்ததைப்பற்றிச் சந்தோஷப்படுவதாகவும் சொன்னார்.

உலகந்தோன்றின நாள் முதல் ஸ்திரீகள் இரக்கமும் தருமசிந்தையும் கொண்டிருப்பவர்களென்றும், வறுமையாலும் பிணியாலும்வருந்துவோர்க்கு உழைப்பது அவர்கள் சுபாவமென்றும் சொன்னார். ஆனால் இந்த உயர்ந்த குணங்களைக்காட்டி உழைப்பது வீட்டுக்குள்ளேயே சாத்தியமாயிருக்கின்றது. இந்திய ஸ்திரீகள் பெரும்பான்மையும் வீட்டுக்கு வெளியே காலங் கழிப்பவர்களல்ல. உலகத்தாரது துக்கங்களைக் கவனித்து அவர்களுக்காக உழைக்கும் வழக்க முள்ளவர்களல்ல .ஐரோப்பாவிலும் வெகுகாலம் அப்படியேயிருந்து வந்தது. அங்குகூட ஸ்திரீகளுடைய இந்த உத்தமமான சுபாவமானது அவரவருடைய குடும்பத்தினருக்கன்றி வெளியார்க்கும் உபயோகப்படாமலிருந்தது.

சுமார் 60. வருஷத்துக்குமுன்னால் இங்கிலாந்து தேசம் ருஷியாதேசத்தோடு போர்புரிய நேரிட அப்போது பிரிட்டிஷ் சோல்ஜர்கள் (Soldiers) ஆயிரக்கணக்காய்க் காயம்பட்டு வருந்தவே, அவர்களுக்குப்பணிவிடை செய்வோரில்லாமல் தவித்துப்போனார்கள். அந்தச் சமயத்தில் மிஸ் பிளாரன்ஸ் நைடிங்கேல் என்ற ஓர் ஆங்கில ஸ்திரீ தமது 34-வது வயதில் வேறு சில ஸ்திரீகளைச் சேர்த்துக்கொண்டு யுத்தம் நடந்தவிடத்துக்குப் போய்காயம் பட்டவர்களுக்குப் பணிவிடை செய்தார். அப்படி ஸ்திரீகள்சேர்ந்து யுத்தக்களங்களில் புண்பட்ட போர்வீரருக்குப் பணிவிடை செய்வது அப்போது தானுண்டான வழக்கம். அதுமுதல் மேல்நாடுகளில் ஸ்திரீகள் வைத்தியசாலைகளிலும் யுத்தகளங்களிலும்தாதிவேலைசெய்யப்பயிற்சிபெற்றுவருகிறார்கள்

ஜப்பானுக்கும் ருஷியாவுக்கும் யுத்தம் நேரிட்டபோது சக்கரவர்த்தினியுடைய பிரயத்தனத்தின்பேரில் ஜப்பானிய ஸ்திரீகள் ஒருசங்கமாகச்சேர்ந்து, யுத்தத்தில் வருந்தும் போர்வீரர்களுக்குப் பல விதமாய் உதவிகள் செய்து வந்தார்கள். ரொட்டி பிஸ்கோத் முதலிய உணவுப் பொருள்கள் சேர்த்து அனுப்புவதும், மேல்ஜோடு பனியன் முதலிய உடைகளனுப்புவதும் வேறு உதவிகள் செய்வதுமாய் உழைத்து வந்தார்கள். அந்தச் சங்கத்து ஸ்திரீகளே அனேக தாதிகளைத் தயார் செய்து யுத்தக் களங்களுக்கு அனுப்பினார்கள். அக்காலத்தில் மிஸ்நைட்டிங்கேல் ஆரம்பித்தபிரயத்தனம் வர வர விசாலித்து ஸ்திரீகளிப்போது அனேக வழிகளில் துன்பப்படுவோர்க்குப் பணிவிடை செய்யும் உத்தமமான தொழிலைச் செய்து வருகிறார்கள்.

இம்மாதிரி இந்து ஸ்திரீகளும் செய்ய வேண்டுமென்று லேடி மூர் மெக்கன்ஸி பேசினார். சேவசாதன் சங்கத்தில் தயாராகும் ஸ்திரீகள் அவர்களுடைய சகோதரிகளுக்குப் பலவிதமாய் நன்மை செய்து காலத்தைச் செலவிடலாமென்று சொன்னார். ஸ்திரீகளால் நமது ஜனங்களுக்குச் செய்யப்படக் கூடிய நன்மைகள் எத்தனையோ விருந்த போதிலும் அவர்களுக்கு வீட்டைவிட்டு வெளியில் பழகும் வழக்க மில்லை யாகையால், மேல் நாட்டு ஸ்திரீகளைப்போல் பரோபகாரம் செய்வதில் தடைப்பட்டிருக்கிறார்கள். நமது ஸ்திரீகளுக்குத் தயவாவது சாமர்த்தியமாவது இல்லையென்பதல்ல. ஆனால்அவர்களுடைய தயவும் சாமர்த்தியமும் அநாதிகாலம் தொட்டுவீட்டுக்குள்ளேயே உபயோகப் படுத்தப்படுவது வழக்கமா யிருப்பதால், மிஸ் பிளாரன்ஸ் நைடிங்கேலைப் போல் இந்திய ஸ்திரீகள் பெயர் வாங்குவது சாத்தியமாயில்லை. ஆயினும் நமது தேசத்து நாகரிகம் மாறிவருவதைப் பார்த்தால் இது எப்போதுமே அசாத்தியமென்று சொல்ல முடியாது.

## பட்டுக் கோட்டை கவர்ன்மெண்டு பெண் பாடசாலை.

மகா-ா-ா-ஸ்ரீ கே எஸ் கோபால ரேத்தினம் ஐயர் அவர்கள் பி. எ. பி. எல் டிஸ்ட்ரிக்டு முன்சீப் நமது கலெக்டர் துரையவர்களின் நல்வரவுக்காக சந்தோஷப் பத்திரிகை படித்தார். அப்பொழுது நமது கலக்டர் துரையவர்கள் அதிக சந்தோஷத்துடன் அக்ராஸனம் எற்றுக்கொண்டார்.

பாடசாலைச் சிறுமிகள் கடவுளைக் குறித்து ஸ்தோத்திரப் பாடல்கள் பாடினார்கள். நமது செயர்மென் துரையவர்களுடையவும், ஸபா ஜனங்களுடையவும் நல்வரவைப்பற்றி வாழ்த்தி, வந்தனப் பாடல்கள் பாடினார்கள்.

ஷை பாடசாலைத் தலைமை உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ வி. ஷி. ரெங்கசாமி நாயுடுவால் ஸ்கூலின் ரிபோர்ட்டு சுருக்கமாகப் படிக்கப்பட்டது. அதாவது இந்த பாடசாலையானது சுமார் முப்பது வருஷகாலமாய் பிரைவேட் மானேஜ்மெண்டிலும் பிறகு தாலுக்கா போர்டு பார்வையிலும் கடைசியாய் 1904-ளுத்திலிருந்து கவர்ண்மெண்டாரால் நடந்து வருவதாயும் நாளுக்கு நாள் அதிக அபிவிர்த்தியடைந்து வருவதாயும் பாடசாலைக்குத் தகுந்த கட்டடமில்லா நிமித்தம், 1909-ளு பிப்ரவரிமீ முதல் சென்ற மேமீ வரையில் ஷை பாடசாலை நிறுத்தப்பட்டு ஷை சாவகாசத்திற்குள்ளாக கவர்ண்மெண்டிலிருந்து சுமார் பதினாயிரம் ரூபாய் வரையிலும் செலவு செய்து அன்றுகூடியிருந்த அழகான கட்டிடம் கட்டப்பட்டதாகவும், தற்காலம் மூன்று உபாத்தியாயரிருப்பதில் எட்மாஸ்டரும், அவரது ஸம்சாரமும், மற்றொரு உபாத்தியாயரு மிருக்கிறதாயும் தற்காலத்தில் ஷை பாடசாலையில் நூறு பெண்களுக்குமேல் வாசித்து வருவதாயும், அதில் ஐம்பத்தேழு பிராமணப் பிள்ளைகளும், இரண்டு கிறிஸ்தவப் பெண்களும், ஒரு மகம்மதியப் பெண்ணும், ஐம்பத்தைந்து சூத்ரப் பெண்களும் இருப்பதாயும், சென்ற ஆகஸ்டுமீ கனம் பொருந்திய இன்ஸ்பெக்டர்ஸ் மிஸ் பி. எப். பார்ஸன்ஸ் துரைசானி பி. ஏ. எல். டி. அம்மாவர்கள் இந்த பாடசாலையை பரீக்ஷைசெய்ததில், அதிக திருப்தியடைந்ததோடுகூட சீக்கிரமாக இன்னுமொரு உதவி உபாத்தியாயரை நியமனம் செய்து அனுப்புவதாக சொல்லிப் போனதாயும், இதுதவிர இப்பாடசாலையில் படித்துவரும் பெண்பிள்ளைகளுக்கு சங்கீதம் கற்றுக்கொடுக்க இவ்வூர் கனவான்கள் வேண்டிய பண உதவி செய்து, ஒரு சங்கீத உபாத்தியாயரையும் நியமித்து பெண்குழந்தைகளுக்குப் பாட்டு சொல்லிக்கொடுத்து வருகிறதாயும் அன்றையதினம் நாமெல்லாரும் ஒன்றுகூடி அதிகமான சந்தோஷமுண்டாகும்படி நமது காருண்ய கலெக்டர் துரை அவர்களை அக்கிராசனாதிபதியாய் அளித்த, கனம்பொருந்திய டிஸ்டிரிக்டு முன்சீப் அவர்களுக்குத்தான் மனப்பூர்வமான வந்தனம் செலுத்துகிற தாயும் நமது செயர்மென் துரை அவர்கள் விலையுயர்ந்த ஒரு அழகிய பொம்மையை ஒரு கெட்டிக்கார பெண்குழந்தைக்கு இனாம் கொடுக்கும்படியாய் அனுப்பினதாயும் சொன்னார்.

மூன்று பெண்பிள்ளைகள் பெண்கல்வி விஷயமாய் சம்பாஷணை பண்ணினார்கள். அது அனேக நீதிகள் அடங்கினதாக இருந்தது.

சிறு குழந்தைகள் பாட்டுப் பாடிக்கொண்டு ஒழுங்காய் வந்து கிண்டர் கார்டன் டிரில் 4 அப்பியாசங்கள் செய்து முடித்து, மார்ச்சிங் பாட்டு சொல்லிக்கொண்டு உபாத்திமார்களுக்கு வந்தனம் சொன்னார்கள். "சிப்பாய் கோலாட்டம்" இது ஸோல்ஜர்கள் சண்டைக்குப்போவதும், போய் தங்குமிடத்தில் கூடாரமடிப்பதும், எதிரிகளிடம் சண்டைக்குப்போவதும், அபஜெயமடைந்து முதுகு காட்டி ஓடுவதும், இருகக்ஷியாரும் உடம்படிக்கை செய்துகொண்டு சமாதானமாய் நாற்காலியிலிருந்து பேசுவதும்போல பாட்டுகளுடனும், அபினயத்துடனும், பெண்பிள்ளைகள் கோலாட்டம் போட்டார்கள்.

பத்து பெண்குழந்தைகள் "பித்தாப் பிறை சூடி" என்ற தேவாரத்தை காதுக்கு இனிமையாய்ப் பாடினார்கள். ஒருசிறுமி "மனைவியின் கடமை" என்பதைப்பற்றி ஒரு உபன்னியாசம் செய்தாள். நல்ல மனைவிக்கு இருக்கவேண்டிய குணங்கள், நல்லமனைவி தனதுபுருஷன், மாமனார், மாமியார், நாத்தனார்கள் அவர்களின் புருஷன் முதலிய பந்துக்களிடம் நடந்துகொள்ளவேண்டியதையும், அதிதிகள், வேலைக்காரர்கள் இவர்களை நடத்தவேண்டிய விதத்தையும் கிரக கிருத்தியங்களை சரியாய் நடத்துவதில் கவனிக்கவேண்டிய விஷயங்களையும் சொல்லிமுடித்தாள்.

"பரிசளித்தல்" பிள்ளைகள் திறமைக்கு தக்கபடி ஹட்மாஸ்டரால் ஏற்கனவே ஏற்படுத்தி சீட்டுகள் ஒட்டப்பட்டிருந்த பலவித இனாம் சாமான்களை நமது செயர்மென் துரையவர்கள் எல்லாப் பிள்ளைகளுக்கும் இனாம்கொடுக்க, இனாம் பெற்றுக்கொண்ட பெண்கள் அதிக சந்தோஷத்துடன் கலெக்டர் துரையவர்களுக்கு சலாம் செய்து போனார்கள்.

ஐந்து வயதுடைய ஒரு சிறு பெண்குழந்தை, "லேடீஸ் சேர்மென் அண்டு ஜென்டில்மென்! கவுரவர்களில் கடைசியோன் விகர்ணன் சபையின் முன் துணிந்து வந்து சொன்னதைப்போல் நான் இந்தப் பெரியோர் நிறைந்த சபையில் பேச வந்ததைப்பற்றி மன்னிக்கும்படியாய் கேட்டுக் கொள்ளுகிறேன். எங்கள் பள்ளிக்கூடத்து சகோதரிகள் இது வரையிலும் செய்த விஷயங்களில் சாரத்தை மாத்திரம் ஏற்றுக்கொண்டு சிற்றறிவுடைய சிறுமியர்கள் அறியாக்குற்றங்களையும் மன்னித்து காப்பாற்றவேணுமாய் நான் மிகவும் வந்தனம்செய்துகேட்டுக்கொள்ளுகிறேன்" என்று சொல்லி முடித்தாள்.

கெட்டியினால் செய்து முத்து சரங்கள் சேர்த்து விசித்திர வேலை செய்த ஒருஅழகிய மாலையை நாலு சிறுமிகள் "வாரும் பாடுவோம்—மாலை சூடுவோம்—எங்கள் அன்பான ஜில்லா கலெக்டருக்கு" என்ற பல்லவியுள்ள பாட்டைப் பாடிக்கொண்டு மாலை சூட்டினார்கள். நமது சேர்மென் துரை அவர்களும் சந்தோஷத்தோடு மாலை அணிந்து கொண்டார்.

நமது காருண்ணிய ஜார்ஜ் சக்கிரவர்த்தியாரைப்பற்றியும் சக்கிரவர்த்தினி அம்மாளைப்பற்றியும் சிறுமியர்கள் அதிக சந்தோஷமாக மங்களம் பாடினார்கள்.

நமது காருண்ணிய சேர்மென் அவர்கள் இன்றிரவு நடந்த விஷயங்களைப்பற்றி தாம நிரம்ப சந்தோஷம் அடைந்ததாகவும் சபையோரை உபசரி

க்கும் பொருட்டு ஹெட்மாஸ்டர் எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு சபையோருக்காக தாம் ஹெட்மாஸ்டருக்கு வந்தனம் செய்வதாகவும் பட்டுக்கோட்டை ஜனங்கள் பள்ளிக்கூடத்தை தாங்களே வைத்துக்கொள்ளாமல் கவர்ன்மெண்டாரின் உதவியை எதிர்பார்த்தது தமக்கு திருப்தியில்லையென்றும் சொன்னார். பிள்ளைகளுக்கு இனாம் கொடுக்கும் விஷயமாய் டிஸ்ட்ரிக்டு முன்சிப் அவர்களும் இன்னும் சில பிரபுக்களும் எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு தாம் நிரம்பவும் சந்தோஷப்படுகிறதாகவும் சொன்னார்.

மகா-ள-ள-ஸ்ரீ டிப்டிகலெக்டர் P. S. வாசுதேவராவ் அவர்கள் பி. ஏ. சேர்மென் துரையவர்களைப் பார்த்து கலெக்டர் பதவியிலிருக்கும் தங்களைப் போலொத்தவர்களுக்கு சவகாசம் கிடைப்பது அரிது. அப்படியிருந்தும் தாங்கள் பிரியத்துடனும் இவ்விடம் விஜயம்செய்து பாடசாலை சிறுமியர்கள் எல்லாருக்கும் இனாம் கொடுத்து சந்தோஷப்படுத்தியதற்காக வந்தனம் செய்யக் கடமைப்பட்ட சபையோருக்காக தான் நிரம்பவும் வந்தனம் செலுத்துவதாகச் சொன்னார்.

"கடவுள் நமது இராஜனை ரக்ஷிப்பாராக" என்று கிராமபோன் பாடவும் சபையோர் கலைந்தார்கள். வெளியில் பாணவேடிக்கை நடந்தது. பிறகு சிறுமிகளுக்கு பக்ஷணங்களும் பழங்களும் கொடுக்கப்பட்டன.

☞ ஓர் மாது.

# சர்வஜித்.

## 29-வது அத்தியாயம்.

மேற்சொல்லிய சம்பவம் நடந்து நாட்கள் இரண்டாயின. முகுந்தனது வைத்திய மகிமையாலும் சேஷியினது பாதுகாப்பாலும் ஸர்வஜித் குணமடைந்துகொண்டுவந்தான். இரண்டாம்நாள் சாயந்தரம் முகுந்தன் வெளியே போயிருக்கும்பொழுது, சேஷியம்மாள் ஸர்வஜித்தைப் பார்த்து பிரபு அநங்கன் அவனை சிறிது நேரத்திற்கெல்லாம் பார்க்கவரக் கருதியிருந்ததாகச் சொன்னாள். இப்படி பேசிக்கொண்டிருக்கும்போதே கதவைத் திறந்து பிரபு அநங்கன் தனது தலையை உள்ளே நீட்டினான்; மேஜையின்மேல் எரிந்துகொண்டிருந்த விளக்கின் வெளிச்சத்தால், ஸர்வஜித்தோடு சேஷியைத் தவிர வேறு யாரும் இல்லையெனக் கண்டு உள்ளே பிரவேசித்து, சேஷியை அவ்விடம் விட்டகலச்செய்து, ஸர்வஜித்துக் கெதிரே ஒரு ஆசனத்தில் உட்கார்ந்து அவனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

"சிறுவனே, புஷ்யமித்திரர் பெண்ணை நீ காப்பாற்றினது கொண்டாடத்தக்கதே; அதற்காக நானும் அவரும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். ஆனால் நீ இப்பொழுது சாதாரணமாய் பேசக்கூடிய சக்தியை அடைந்திருக்கிறபடியால், நானும நீயும் சிறிதுநேரம் பேசவேண்டியது அவசியமாயிருக்கிறது. முதலாவது இங்கிலாந்துக்குப் போவதாய் ஒத்துக்கொண்ட நீ திடீ

ரென்று மனதை மாற்றினதற்குக் காரணத்தைக் கூறுவாயா? நீ யப்படிச் செய்ததால் லீலாவதியின் மனதிற்கு விரோதமாய் நடந்ததுமல்லாமல், மறுபடியும் பாதகச்செய்கையை செய்திருக்கிறாய். ஏனெனில், நீ லீலாவதியின் கருத்தின்படி நடக்காதது தான் உன்னை அன்று இராத்திரி கொலை செய்யும்படி செய்தது—" என்று சொல்லப்போக, ஸர்வஜித் "என்ன பிரபுவே, என்னைக் காத்துக் கொள்ளுவதற்காக மற்றவர்களைக் கொல்லுவது கொலையாகுமா?" என்று தான் மலையதிபதியின் ஆட்களைக் கொன்றதற்காக அநங்கன் தன்னை கொலையாளி யென்று சொல்லுகிறதாக எண்ணி பதில் சொன்னான்.

"சிறுவனே, என்னுடைய ஆட்கள் இருவரும் நீங்கள் தனியே செல்லும்போது முதலில் உன்னை யெதிர்த்தார்கள் என்று சொல்ல வருகிறாயா என்ன? இருக்காது; நீ தான் அவர்களை முதலில் தாக்கியிருக்கவேண்டும்" என்று அநங்கன் சொன்னான்.

"தாங்கள் என்னையா சொல்லுகிறீர்?" என்று ஆச்சரியத்தால் ஸர்வஜித் கேட்கவே, அநங்கன், "ஸர்வஜித், உனது கபடத்தை நான் என்னவென்று சொல்லுவேன். என்ன, என்னுடைய ஆட்கள் இருவரும் உன்னால் கொல்லப்படவில்லை யென்று சொல்ல வருகிறாய்? நீ அவர்களுடைய பிரேதங்களை இழுத்து புதரில் ஒளிக்க வில்லை யென்று சொல்ல வருகிறாய்? நான் இதுவரையில் இச்சமாசாரத்தை வெளியிடவில்லை; உன்னோடு அவர்கள் சென்றதையும் நீ அவர்களைக் கொன்றதையும் இரகஸ்யமாய் வைத்திருக்கிறேன். மற்றவர்கள் எல்லோரும் அவ்விருவர்களும் வழிப்பறிக்காரர்களால் கொலையுண்டிருக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நான் உன்மேல் தயவு வைத்து உன் பெயரை இதுவரையில் வெளியிடவில்லை. ஆனால் நீ கொலைசெய்யவில்லை யென்று மறுக்கும் பக்ஷத்தில் உன்னை நான் காக்கமாட்டேன். இந்த இரண்டாம் கொலை முதற் கொலைக்கு ஆதாரமாய் இருக்கும்படி பின்வருமாறு வெளியிடுவேன். நீ ஸுரேந்திரனைக் கொன்றதற்காக பிடித்துவைக்கப்பட் டிருக்கும்போது இரவில் தப்பி ஓடுகையில், உன்னை என் வேவுகாரர்களிலிருவர் பின் தொடர்ந்து சென்றார்களென்றும் அவர்களை நீ கொன்றுவிட்டா யென்றுஞ் சொல்லுவேன்" என்றான்.

இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஸர்வஜித் ஆச்சரியப்பட்டு ஒன்றுந் தோன்றாதபடி திகைத்து நின்றான். பிரபு சொல்லி முடித்த ஒரு நிமிஷத்திற்கெல்லாம் சொல்லுகிறான்.

"தங்கள் ஆட்களின் பிரேதங்கள் காட்டில் புதரில் மறைந்து கிடந்ததாகச் சொல்லுகிறீர்கள். அவர்கள் கொல்லப்பட்டது என் பக்கத்தில் நின்று எனக்காக சண்டை போடும்பொழுதே யொழிய எனக்கு விரோதமாய் சண்டை செய்தல்ல. நாங்கள் சென்றுகொண்டிருக்கையில் மலையதிபதிகளையும் அவர்களுடைய ஆட்களையுஞ் சந்தித்தோம்; அவர்கள் எங்களை யெதிர்த்தார்கள். நாங்கள் மூவரும் அவர்களை எதிர்த்தோம். தங்களாட்களிருவரும் சண்டையில் மாண்டார்கள். ஆட்களின் பிரேதங்களை மலையதிபதிகளின் ஆட்களே புதரில் இழுத்தெறிந்திருக்கவேண்டும் நானோ சிறிதும் தீங்கடையாமல் அவ்விடத்திலிருந்து தப்பியோடி விட்டேன்; குண்டகிலன் லீலாவதி

யைத் தூக்கிச்செல்லுஞ் சமையத்தில் நான் கோட்டையை யடைந்தேன்'' என்றான்.

ஸர்வஜித் பேசுகையில் அநங்கன் அவன் உள்ளத்தை முற்றிலும் அறிந்து விடுகிறவன்போல் அவனை உற்றுநோக்கிக் கொண்டிருந்தான்; ஸர்வஜித்தின் முகத்தைப்பார்க்கும்போது சிறிதும் கபடமில்லாமலிருந்தது; அவன் சொல்வது யாதும் உண்மை யென்றே அநங்கனுடைய இஷ்டத்திற்கு விரோதமாகவே நம்பும்படி செய்தது. முதலில் ஸர்வஜித்தே தனது வேலைக்காரர்களைக் கொன்றிருக்கவேண்டுமென்று எண்ணினான்; ஆனால் ஸர்வஜித் உண்மையை விளக்கிக் காட்டினவுடன் தான்கொண்ட அபிப்பிராயம் தவறு என்று பட்டது. ஆயினும், தான் ஸர்வஜித்தை குற்றவாளி யில்லை யென்று வெளிக்காட்டுவது தான் கருத்திற் கொண்ட காரியத்திற்குப் பிரதிகூலமாகு மென்றெண்ணி, ஸர்வஜித் சொன்னதை நம்பாதவன்போல் நடித்தான்.

"ஸர்வஜித், நீ கதை கட்டுவதில் புத்திசாலியா யிருக்கிறாய். மலையதிபதிகள் வெளியே வந்த காரணத்தைக்கொண்டு என்னாட்களின் கொலையை அவர்கள் தலையில் கட்டிவிட்டாய். ஆனால் நீ என்னை ஏமாற்ற முடியாது. இரண்டு அகாத வீரர்கள் கொல்லப்பட்ட சண்டையில் நீ மாத்திரம் தீங்கில்லாமல் தப்பித்து வந்ததாகச் சொல்லுவதை நம்பமுடியவில்லை,'' எனவே, ஸர்வஜித், "நீங்கள் நம்பினாலும் நம்பாவிடினும் நான் சொல்வது மெய்யே'' என்றான்.

நீ சொல்லுவதே உண்மையென்று வைத்துக்கொள்ளுவோம், நீ யேன் இவ்விடத்திற்குத் திரும்பிவந்தாய்? நீ யேன் இங்கிலாந்துக்குப் போகவில்லை? சிமாட்டி லீலாவதிக்காக எதையும் இழக்கசித்தமாயிருக்கிறேனென்று வீரியப் பேச்சு இப்பொழுது எங்கே பறந்துபோய்விட்டது?'' என்று கேலிசெய்து கொண்டு அநங்கன் கேட்க, ஸர்வஜித் "எனக்கு மேலான ஒரு தெய்விக சக்தி என்னைத் திரும்பச்செய்த'' தென்றான்.

"எனதாட்கள் எதிரியோடு சண்டைசெய்கையில் கொல்லப்பட்டார்களென்று சொல்வதுபோல இதுஒரு கற்பனை,'' என்று குத்தும்படி சொல்ல, ஸர்வஜித் "நான் கேட்டிருப்பது உண்மையாயின், இருபத்தி மூன்று வருஷங்களுக்கு முன்னும், சென்ற கர்த்தர் பிறந்த நாளன்றும், போஜனமண்டபத்தில் அதிசயக்காக்ஷிகளைக் கண்டிருக்க, நான் சொல்லுவதை நம்பாதவர் போல் நடிப்பது வீண்'' எனவே, அநங்கன் நடுநடுங்கி, முகம் வெளுத்து, உயிர்போனவன்போல் "ஆ, என்ன சொன்னாய்?'' என்றுகேட்டான். அதற்கு ஸர்வஜித், "நாம் இதைப்பற்றி அதிகமாய்ப் பேசவேண்டாம். என் விடைகளில் தங்களுக்கு நம்பிக்கையில்லை அப்படியிருக்க, நீங்கள் ஏன் வீணாய் வார்த்தையை வளர்க்கவேண்டும்? எல்லாவற்றிற்கும் ஈசன் ஒருவர் இருக்கிறார். இப்பொழுது விளங்காததை தக்க காலத்தில் விளக்குவார்'' என, பிரபு "முகுந்தன் நீ அடிக்கடி பிதற்றினாய்'' என்றான். இன்னும் உன்னைவிட்டு ஜன்னி நீங்கவில்லையெனத் தோன்றுகிறது'' என்றான்.

ஸர்வஜித்:— "என்னுடைய புத்தி தங்களதைப்போலவே தெளிவாய் இருக்கிறது.''

அநங்கன்:— நீ சொல்வது உண்மையாயின் நியாயத்திற்குக் கட்டுப் படுவாய். இனித்தாமதமின்றி இங்கிலாந்துக்கு ஓடுவதாக சம்மதிக்கிறாயா?

ஸர்வஜித்:— என்ன! மறுபடியும் அந்தப்பேச்சுத்தானா? முடியாது, பிரபுவே, முடியாது. தாங்கள்சொல்வது என் தலைவிதிக்கு விரோதமாயிருக் கிறது; அதை நான் நிச்சயமாய் உணருகிறேன். ஈசன் விடுகிற வழியை ஏற் றுக்கொண்டு இங்கேயே தான் இருக்கப்போகிறேன்.

அநங்கன்:— பிடிவாதமான பையா, உன் உறுதி அப்படித்தானா?

ஸர்வஜித்:— ஆம், அப்படித்தான்.

அநங்கன்:— நான் மாற்றுவது முடியாத காரியமா என்பதைத்தான் அறிந்துவிடுகிறேன்.

ஸர்வஜித்:— கடினமாகும் பிரபுவே.

அநங்கன்:— அப்படியானால் லீலாவதியின் வார்த்தைகளுக்கு நீ சிறி தேனும் மதிப்பு வைக்கவில்லையா? அவளுடைய மனதிற்கிசைந்து தான் முந்திநாள் இராத்திரியைப்போல் இன்றைக்கும் வந்தேன்.

ஸர்வஜித்:— நான் லீலாவதியின் நேர்முகமாய் அவள் வாயைக்கொண் டே அவளது அபிப்பிராயத்தை அறியவேண்டும். அவள் நேராகச்சொன் னால் அவளிஷ்டப்படி நடக்கிறேன்.

அநங்கன்:— நீ துன்மார்க்கன். நான் கல்யாணஞ்செய்து கொள்ளப் போகிற ஸ்திரீயோடு இச்சமயத்தில் நீ பேசவிரும்புவது உனது இழிவான நோக்கத்தை வெளியிடுகிறது. ஏ மானங்கெட்ட—".

ஸர்வஜித்:—சக்திபற்றுக் கிடக்கிற வியாதியஸ்தனை மனதார திட்டுவ தற்கா இங்கு வந்தீர்கள்? தாங்கள் பேசுவது சிறிதும் சரியல்ல.

அநங்கன்:— அடே நான் சொல்லுவதைக்கேள். லீலாவதியின் இஷ் டப்படி உன்னை மறுபடியும் இங்கிலாந்துக்குப் போகச்செய்வதற்கு இங்கு வந்தேன். ஆகையால் நீ இன்று இராத்திரி பிரயாணத்திற்கு ஆயத்தமாயிரு க்கவேண்டும். நான் சொல்லுகிறபடி நீ செய்யத்தவறினால் நான் உனக்கு தணியாப்பகைவனாவேன். ஈவு இரக்கம் உன் விஷயத்தில் வைய்யேன். இப்பொழுது உன் தலைமேல் சுமந்திருக்கிற குற்றமாகிய பாரத்தோடு விடா மல், நான் இந்த அறையை விட்டு வெளியே சென்றவுடன், நீ என்னை உன் னறைக்கு வரும்படி கூப்பிட்டதாகவும் வந்தவுடன் நீ ஸுரேந்திரனைக் கொன்றதாக ஒத்துக்கொண்ட தோடுங்கூட என் வேவுக்காரர்களிருவரையும் கொன்றதாக ஒத்துக்கொண்டதாயும் வெளியிடுவேன்.

ஸர்வஜித்:— ஐயோ, இவ்வார்த்தைகள் கரணகடோரங்களாயிருக்கின் றனவே; பிரபுவே, தாங்கள் ஒரு பிசாசா?

அநங்கன்:— உன் வார்த்தைகளை நிறுத்து. ஆயினும் என் சொற்படி நீ செய்யாவிடில் நான் பிசாசுகளில் பெரிய பிசாசாயிருப்பேன்.

ஸர்வஜித்:— நீங்கள் சொல்வது யாதும் பொய்யென்று சொல்லிவிட்டால் என்ன செய்வீர்கள்?

அநங்கன்:— நீ மறுக்கவா? உன்னையார் நம்புவார்கள்? என்னுடைய வார்த்தைகளைவிட உன் வார்த்தைகள் எப்படி ஏறும்? தவிர, அநுவிஷயங்களெல்லாம் உனக்கு விரோதமாயிருக்கின்றன வல்லவா? ஏற்கனவே கோட்டையிலுள்ளவர்களெல்லோரும் நீ தானாகவே தப்பித்தோடி விட்டாய் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். உன்னைப்பிடிக்கப்போன இருவர்களை நீ கொன்றாயென்பதைத்தவிர வேறு எதை அவர்கள் நம்பக்கூடும்? இந்த அத்தாட்சிகளையெல்லாம் நான் வெளியிடுவேன்; உலகமுழுதும் உன்னை ஸுரேந்திரனுடைய கொலையாளியென்றும், விசுவாசமான எனது இருவேவுகாரர்களைக்கொன்றவனென்றும் நிந்திப்பார்கள்.

ஸர்வஜித்:— தங்களது எண்ணங்கள் இவ்வளவு இழிவுள்ளதாயிருக்கும் பக்ஷத்தில் என்னை நசுக்கவேண்டுமென்று கங்கணங்கட்டிக்கொண்டிருக்கிறீர்கள்போல் தெரிகிறது. நான் செய்யக்கூடியதொன்றுமில்லை. ஈசனிடத்தில் நம்பிக்கை முழுதும் வைத்திருக்கிறேன்.

அநங்கன்:— அப்படியானால் நான் சொல்லுவதற்கிணங்கி நடக்கமாட்டாயா?

ஸர்வஜித்:— நடக்கமாட்டேன்.
அநங்கன்:—நிச்சயந்தானா?
ஸர்வஜித்:—நிச்சயந்தான்.

அநங்கன்:—அப்படியாகில் இந்த நிமிஷம் முதற்கொண்டு என்னை உனது ஜன்ம சத்துருவாக நினைத்துக்கொள்.

என்று சொல்லிக்கொண்டே வெளியே போய்விட்டான். இப்படி போய்க்கொண் டிருக்கையில் எதிரேவருகிற வரதனைக்கண்டான். அவனைப் பார்த்து, "வரதா, நீபோய் காவலாளி ஒருவனைக் கூட்டிவந்து ஸர்வஜித்தின் அறையை பாதுகார்க்கும்படி தாக்கீதுசெய். ஸர்வஜித்தோடு மற்றெவரும் பேசாதபடி பார்த்துக் கொள்ளும்படிசொல். முகுந்தன் மாத்திரம் அவசியமிருந்தால் உள்ளே செல்லட்டும்; அவனும் காரியார்த்தமாய் மாத்திரம் ஸர்வஜித்தோடு பேசட்டும். மற்றப்படி அவனைப் பேசவிடக்கூடாது. சேஷியம்மாள் ஸர்வஜித்தின் அறைக்குள் பிரவேசிக்கவே கூடாது. நானும் அப்படியே அவளுக்கு தாக்கீதிட்டு விடுகிறேன்" என்று சொல்லவே, வரதனும், "தங்களது அபிப்பிராயம் முழுவதையும் அறிந்துகொண்டேன். நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம். எல்லாவற்றையும் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்றான்.

இச் சம்பாஷணை நடந்த ஐந்து நிமிஷத்திற்குள்ளாக ஒரு காவலன் ஸர்வஜித்தி னறைக்கருகில் நிறுத்தப்பட்டான். இப்படி நடந்ததொன்றும்

ஸர்வஜித்துக்குத் தெரியாது. இது நடந்த ஒருமணி நேரத்திற்கெல்லாம் முகுந்தன் ஸர்வஜித்திற்கு மருந்து கொடுக்கவந்தான்; ஆனால் முகுந்தனுள்ளவரையிலும் காவலனும்கூட இருந்ததைப்பார்த்த ஸர்வஜித் காவலன்கூட வந்த காரணத்தைவினவ, சங்கதிகளனைத்தையும் தெரிந்துகொண்டான்.

இது இப்படியிருக்க, அநங்கன் புஷ்யமித்திரரிடஞ்சென்று பின்வருமாறு சொன்னான்:—

"சிறிது நேரத்திற்கு முந்தி ஸர்வஜித் தன்னைப் பார்க்கவரும்படி எனக்குச் சொல்லியனுப்பினான். நானும் அவனது வேண்டுகோளிற் கிசைந்து போனேன். தான் உள்ளதை உள்ளபடியே சொல்லி விடுவதாயும் தன்னுயிரைக் காப்பாற்றவேண்டுமென்றும் சொல்லிக்கொண்டு காலில் விழுந்தான். நான் மறுமொழியாக அவன் உண்மையாய் விசனப்படும் பக்ஷத்தில் உடனே உண்மையை சொல்லி விடும்படி சொன்னேன். பிறகு தான் கையால் ஸுரேந்திரனைக் காட்டில் கொன்றதாகச் சொன்னான்; தவிரவும் என்னுடைய ஆட்களில் இருவரையும் கொன்றதாகச் சொன்னான். ஸர்வஜித் கோட்டையிலிருந்து தப்பியோடின இராத்திரியன்று என்னாட்களிலிருவர் பின்தொடர்ந்து சென்று, அவனைக்கிட்டி கூடியமட்டும் மரியாதையாய் கோட்டைக்குத் திரும்பும்படி சொன்னார்களாம். ஸர்வஜித்தும் திரும்புகிறவன்போல் நடித்துக் கொண்டு வருகையில் திடீரென்று பின்பக்கத்திலிருந்து அவனுக்குத்தெரியாமல் தலையில் ஓங்கி யடித்தானாம்; அடிபடவே அவன் இறந்துபோய் விழுந்தானாம். சடுதியில் மற்றவனையும் கொன்றானாம். தனது பாதகச்செய்கையை நினைத்தவுடன் ஸர்வஜித்திற்கு விசனம் வந்து, கோட்டைக்கு வந்து தங்கள் காலில் விழுந்து, உள்ளதை ஒளிக்காமல் சொல்லி தங்களை இரக்கம் வைக்கும்படி கெஞ்சுவதற்காக வந்தானாம். வந்தவன் புறவாயிற் கடையில் குண்டலன் லீலாவதியை தூக்கிக்கொண்டு போனதைப்பார்க்கையில் அவனோடு சண்டை செய்து கடைசியில் மூர்ச்சை யடைந்தான். இப்பொழுது அவனுக்கு உடம்பு கொஞ்சம் சரியாயிருப்பதால் உங்களை நேரே பார்ப்பதற்கு வெட்கி எனக்கு சொல்லி யனுப்பினான். இச்சங்கதிகளை யறிந்தவுடன் இனி சேஷி யவனிடத்திலணுகுவது தகுதியல்லவென்று அவளை யங்கு போகாதபடி உத்தரவு செய்திருக்கிறேன். தவிரவும் மறுபடியும் ஸர்வஜித் தப்பித்தோடாதபடி காவலும வைத்திருக்கிறேன்."

"தாங்கள் செய்திருக்கிற ஏற்பாடுகள் யாவும் சிலாக்கியமானவைகளே. இனி நாம் செய்யவேண்டியதொன்றுமில்லை. அமராபுரியிலிருந்து நியாயாதிபதிகள் வந்து இவ்விஷயத்தை முடிவு செய்யட்டும். ஓ ஸர்வஜித், ஸர்வஜித், என்னருமை மகனை உன் கை கொன்றதை நினைக்க சகிக்கவில்லையே. ஐயோ இப்படிப்பட்ட கஷ்டகாலமா வரவேண்டும்" என்றழுதார்.

இதைப்பற்றி நாம் அதிகமாய் விஸ்தரிக்கவேண்டாம்; பத்து நாட்கள் சென்றன. ஸர்வஜித்தின் உடம்பு குணப்பட்டவுடன் முகுந்தன் போவதையும் தடுத்து விட்டார்கள். ஆனால் சில சமயங்களில் ஸர்வஜித் வியாகூலத்தில் முழுகினபோதிலும், தன்னை தெய்வமே காத்து வருகிறாரென்றெண்ணி தைரியத்தை நழுவவிடாமலிருந்தான்.

பத்து நாட்கள் சென்றபிறகு நியாயாதிபதிகள் அனந்தகிரியில் ஸர்வஜித்தின் விசாரணையை நடத்துவார்களென்றும், அவர்கள் அதற்காகப் புறப்பட்டு விட்டார்களென்றும் அமராபுரியிலிருந்து சமாசாரம் எட்டிற்று.

## நாம் கேட்பதையெல்லாம் கடவுள் நமக்கு ஏன் கொடுக்கிறதில்லை?

"தெய்வபக்தி பூரணமாய் அமையப் பெற்றவர்களும் ஒவ்வோர் காலத்தில் தாம் கேட்பனவற்றைக் கடவுள் தாராவிடத்து அவரைக் கருணை யற்றவரென்று நிந்திப்பதும், கடவுள் என்னும் ஒரு பொருள் இல்லையென்றே பிதற்றுவதும் உலக இயல்பா யிருக்கிறது. இது பெரும்பிழை. மனிதன் எதிர்கால உணர்ச்சி முற்றும் அற்றவனென்று சிறு குழந்தையும் ஒப்புக்கொள்ளும். ஆகையால் ஈஸ்வரனை நோக்கி மனிதன் கேட்கும் விஷயங்கள் யாவும் தனக்கு நன்மையைத் தரத்தக்கனவே யென்று அவன் நினைப்பது பெருத்த மதிமோசமேயாகும். தனக்கு நன்மையைப் பயக்கத் தக்கனவென்று தான் கருதிக் கேட்கும் பல விஷயங்கள் முடிவில் தனக்குப் பெருத்த துன்பத்தைத் தரத்தக்கனவா யிருக்கக் கூடும்.

பொன்னி னிடத்தில் பேரவாக் கொண்டிருந்த ஓர் அரசன் நெடுங்காலமாய்க் கடவுளைநோக்கி யான் தொட்டதெல்லாம் பொன்னாகவேண்டும் என்று பிரார்த்தித்து வந்தான். அவன் பிரார்த்தனை ஈடேறுமானால் அது அவனுக்குப் பெருத்த ஹானியை உண்டாக்குமென்பதை உணர்ந்து கடவுள் அவன் எண்ணத்தை முடிக்காமலே இருந்தார். பிறகு அவ்வரசன் கடவுளைப் பலவாறாக நிந்திக்கத் தலைப்பட்டான். அவனும் உலகத்திலுள்ள ஏனையோரும் உண்மைதெரிந்து உய்யும்படி கடவுள் ஓர் நாள் அவன் கனவில் ஒரு யோக புருஷர்போல் எழுந்தருளி, மைந்தனே! இன்றுமுதல் நீ தொட்டதெல்லாம் பொன்னாகக் கடவது என அனுக்கிரகித்தோம் என்று சொல்லி மறைந்தனர். அரசன் உடனே மனமகிழ்ச்சி கொண்டெழுந்து தன்னுடைய படுக்கைதன் பக்கத்திலிருந்த கல், மண், தூண், துணி, முதலிய யாவற்றையும் தொட்ட மாத்திரத்தில் அவைகளெல்லாம் பொன்னாய் விட்டன. இதைக்கண்டு அரசன் கடவுள் என்னிடத்து வைத்த கருணையே கருணை! என்று வியந்தான். பிறகு சாப்பிடுவதற்காக இலையில் உட்கார்ந்து அவன்போஜனத்தைத் தொட்டமாத்திரத்தில் அது பொற்கட்டியாய் விட்டது. தண்ணீரை வாயில் வார்த்தவுடன் அதுவும் அப்படியே ஆய்விட்டது. பசி, தாகம் மிகுதியால் ஐயோ! என்செய்வேன்? என்று அலறினான். தின்பண்டங்கள் யாவும் தன் ஸ்பரிசமாத்திரத்தில் பொற்கட்டிகளாகவே, அவன், ஐயோ! மதிமோசம் போனேனே! இப்படிப்பட்ட பாழும் வரத்தையும் கேட்பேனா? பத்தரைமாற்று ஆயிரம் வராகனிடைப் பொன்னைவிட ஒருபிடி அன்னம் எனக்கு விசேஷமாயிருக்கிறதே! என்று துக்கித்து நாலைந்து நாளாய் ஆகாரம் ஒன்றுமில்லாமல் மூர்ச்சையானான். கடவுள் மறுபடியும்அவன்கனவில்வந்துஅப்பா! க்ஷேமமா? என்றார். அதற்கு அவன், சுவாமி! தேவரீர்கொடுத்த வரத்தை தேவரீரே பெற்றுக்கொள்ளுவீராகவும். தினம ஒருபிடி அன்னம் சாப்பிட்டுக்கொண்டு யான் உயிரோடிருந்தால் போதும், இந்தப் பாழும்பொன் எனக்கு வேண்டாம் என்றான். கடவுள் புன்சிரிப்புடன் அப்படியே ஆகட்டுமென்று மறைந்தனர்.

ஆகையால் "என்னிலும் மினியானொருவன் னுளன்." என்றும், "எல்லாமறிந்த நீயறிவை யறிவிலி யறிகிலேனந்தோ!" என்றும் மேலோர் கூறிய

படி நமக்கு இனியது இன்னதென்பதையும், இன்னாதது இன்னதென்பதை யும் உணர்ந்த கருணைப் பெருங்கடலாகிய கடவுள் நம் பிரார்த்தனைப்படி யெல்லாம் தாராமைக்காக அவரை நோவது பெருத்த அவிவேகமாகும். கட வுள் நமக்கு யாதொன்றைத் தருவதும், தாராதிருப்பதும் எல்லாம் நம்மு டைய நன்மைக்கென்றே அறியவும்". ஐ. வி.

# நரேந்திரபுர நங்கை.

## 6-வது அத்தியாயம்.

### பார்வதி தன் தாய்தந்தையைக் காணுதல்.

"என் புதல்வியைக் கெடுத்து என்பெண்சாதியையுங் கொன்றுபோட்ட அப்படுபாவி என் கண்ணிலகப் பட்டால் அவனை இப்பொழுதே வெட்டி யெறிவேன். இவ்விடத்தி லிருந்து எங்கேயோ ஓடிப்போய் விட்டானே! இனி நானவனை எங்கு கண்டு பிடித்து பழிக்குப் பழிதீர்த்துவிடுவது—ஈசா! நீதானவனை எனக்குக் காட்டிக் கொடுக்க வேண்டும்" என்று ஒருவர் நரேந் திர புரத்தில் நினைத்துக்கொண் டிருந்தார். அவர் பெயர் கோபால நாயகர்.

அப்படிச் செய்தவன் யாவன்? அவன் நம்முடைய இராமன்தான்.

இது நிற்க, நாமிப்போது சத்திய புரியிலிருக்கும் இராமன், இராமநா தன் இவ்விருவரைப் பற்றி விசாரிப்போம்.

இராமன் அநியாயமாய் இராமநாதனிட மிருந்து சுமார் இருபதினாயி ரம் ரூபாய் பெற்றுக்கொண்டு, மூன்று வருஷத்திற்குள் பிரபு பட்டம்பெற் றான்.

இராமநாதனோ, தன் சொத்துகள் யாவற்றையும் முருகம்மாளிடத்திற் கொடுத்து அவளிடம் சிலகாலம் வசித்து வந்தான். பிறகு, அவள் அவனை விட்டு எங்கோயோ ஓடிப்போய் விட்டாள். இராமநாதன்கதி அதோகதிதான். ஐயோ, என்ன செய்வான் பாவம்! அவன் இன்னகதி யானானென்று எவரு மறிந்திலர்.

இப்படி யிருக்கையில், இராமநாதன் தான் பிறந்த ஊரைப்பார்க்க விரு ம்பி, சொத்துகளைப் பத்திரப் படுத்திவிட்டு, படகேறி, முத்தூர் கிராமஞ் சேர்ந்து, ஓரிரட்டை மாட்டுவண்டி வாடகைக்குப் பேசி, அதிலேறி, பொழு துவிடிந்ததும் தான் பிறந்த நரேந்திர புரஞ் சேர்ந்தான்.

இராமனை நெடுநாட்களாய்த் தேடிக்கொண்டிருந்த கோபாலநாயகர் அன்று அவனைக்கண்டு, தகுந்த சாட்சிகளைக்கொண்டு அரசனிடத்திற் பிராது செய்தான். இராமன் எவ்வளவோ மறைத்துப் பேசியும் அவனுக்குச் சரி

யான சாட்சிக ளில்லாமையால் குற்றவாளியாகித் தூக்கிவிடப் பட்டான். அவன் சொத்துக்கள் அக்காலத்திய விதிப்படி கோவிலுக்குச் சேர்ந்துவிட்டன.

* * * *

இது நடந்த சிறிது நாளைக்குள், சத்தியபுரியின் சிற்றரசன், சங்கரனின் புத்திசாதுர்யத்தைக் கேள்வியுற்று, அவனை ஒருவருஷத்திற்குத் தன்னிட மனுப்பும்படி அதிகவணக்கத்துடன் ஒரு நிருபம் வரைந்தான். இச்செய்தியை அம்மன்னன் சங்கரனுக்கறிவிக்க அவனுமதற்கிசைந்தான்.

மறுநாட்காலை ஜானகி சங்கரனை ஒரு தனியிடத்தில் சந்தித்து, அவனைத் தன் விருப்பத்திற்கு இசையும்படி எவ்வளவு வேண்டியும் அவன் ஒப்புக்கொள்ளாதது கண்டு தன் ஊர்போய்ச் சேர்ந்து, இது கடவுள் இட்ட கட்டளை என்று எண்ணி, அவரை எப்பொழுதும் வணங்கிக்கொண்டு சத்விஷயத்தில் காலத்தை கழித்துவந்தாள். சங்கரனே அதற்கடுத்தவாரமே தன் மனைவியுடன் சத்தியபுரிக்குப் புறப்பட்டுப்போனான். போகிறவழியில் சண்பகாவதி நதிக்கரையில் தபசியொருவர் ஸ்நானம் செய்துகொண்டிருந்ததை நங்கதாநாயகி கண்டு, அவர் தன் தந்தையென்றறிந்து, சங்கரனை நோக்கி:—

"நாதா! இதோ இத் தபசிதான் என் தந்தை"

சங்கரன்:—அவரா?

பார்வதி:—"ஆம்! ஆம்!!" என்றுசொல்லி ஆனந்த பாஷ்பம் சொரியலானாள்.

உடனே சங்கரன் அவரிடஞ்சென்று:—

"தபசிரேஷ்டரே! அதோ நிற்கும் என் காதலிநும் குமாரத்தியோ?"

தபசி:—உன்காதலி—என்குமாரத்தி—யாரையா நீர்?

சங்கரன்:—"கோபம்வேண்டாம், அதோ அவ்விடத்தில் நிற்கும் அப்பெண்பிள்ளையைப்பாரும்" என்று சொல்லிமுடித்ததும் அத்தபசி தன் கண்களை எறெடுத்து அவளைப்பார்த்து, "அம்மா! நீயா பார்வதி? பார்வதி நீயா? என்றார்.

பார்வதி:—அப்பா! உமக்கு எப்படித்தோன்றுகிறது?

தபசி:—"இத்தனை நாட்களாய் நீ எங்கிருந்தாய் அம்மா?" என்றுகேட்டதும், பார்வதி தான் காட்டில் அவஸ்தைப்பட்டதிலிருந்து அங்கு வந்தவரைக்கும் நடந்த சங்கதிகள் யாவையும் சவிஸ்தாரமாய்ச்சொல்லி முடித்தாள்.

அவரும் அவர்களுடன் போகக் ஒத்துக்கொண்டார்.

இம்மூவர் சத்தியபுரி சேர்ந்ததும் சங்கரன் மந்திரிவேலையை எற்றுக்கொண்டு, தன் மாமனாரைக் கண்டதற்காக ஒருவிருந்துசெய்தான். அவ்விருந்திற்கு அவன் தாய் தந்தையரும், நரேந்திரபுரத்துப் பிரஜைகளும் அவர்களரசனும், சத்தியபுரியின் சிற்றரசனும் அவனது குடிகளும் வந்திருந்தனரென்றால் அதன் சிறப்பை நாம் விவரிக்கமுடியுமோ!

ஆறுமாதங்கள் சென்றன. பார்வதி தன் தாயாரைக்காணவில்லை. ஒரு நாள் சங்கரனும் அவனது அரசனும் சில பணிவிடைக்காரருடன் வேட்டையாட காட்டுக்குச் சென்றனர்.

சூரியன் அஸ்தமித்து ஒரு நாழிகையாயிற்று. வேட்டையாடின பிறகு யாவரும் சத்தியபுரியை நோக்கிவராநின்றனர். வருகிறவழியில் காட்டினொரு புறத்தில் விளக்கொன்று மினுக்கு மினுக்கென்று பிரகாசித்துக்கொண்டிருந்தது. அது யாதென்றறிய எல்லாரும் அங்குசென்று, அங்கிருந்த குடிசையில் ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருந்ததைக்கண்டு, அவளங்கிருப்பதற்குக் காரணம் யாதென்று வினவ, அவள் பின்வருமாறு தன் வரலாற்றைச் சொல்லலானாள்:—

"ஐயன் மீர்! நானிருந்தது சத்தியபுரி. என் தந்தைபெயர் சம்பந்தமுதலியார். அவரென்னைச் சிறுவயதிலேயே சிவநேசமுதலியா ரென்னும் பிரபுவுக்கு விவாகஞ்செய்து விட்டு தேக வியோகமாயினர். என்னை மணம்புரிந்த தேதி முதற்கொண்டு நான் என்பர்த்தாவைப்பிரிந்த நாள்வரையில் அவர் என்னை அதிக அன்பாய் நடத்திவந்தார். இப்படியிருக்கையில், எனக்கு ஒரு பெண்குழந்தைபிறந்தது. அதை நாங்களிருவரும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வருகையில் ஒருநாள் சந்நியாசியொருவன், என் புருஷன் வீட்டிலில்லாத சமயத்தில் வந்து என்னைப்பிட்சைகேட்டது தான் தெரியும். பிறகு தனியாய் நான் இங்கு விசனப்பட்டுக்கொண்டிருக்க, நான்கு திருடர் என்னை அவர்களுக்குச்சாதம் சமைத்துப்போட வைத்துக்கொண்டார்கள், ஒரு மாதகாலமாய் அவர்கள் இங்குவருவதில்லை என்று சொல்லிமுடித்தாள்.

சங்கரன்:—அப்பெண்குழந்தையின் பெயர் யாது?

ஸ்திரீ:—'பார்வதி' என்று சொன்னதும் சங்கரன் அதிக மகிழ்ச்சியுற்று அந்த ஸ்திரீயைத்தன்னுடன் அழைத்துக்கொண்டு, அரசனை நோக்கி:—

"இந்தம்மாள் என் மாமியார்" என்றான்.

அரசனுமிதைக்கேட்டுச் சந்தோஷமடைந்தனன். இரண்டு நாழிகைக்குள் யாவரும் அரண்மனை யடைந்தனர். சங்கரன் அவ்வரசனின் உத்தரவுபெற்று அந்த ஸ்திரீயுடன் தன் மாளிகைக்கேகினான். சிவநேசமுதலியார் தன் மனைவியைக்கண்டதும் புன்னகை புரிந்தார். பார்வதியும் அவள் தாயும் ஒருவரை யொருவர் கட்டிக்கொண்டழுதனர். மறுபடியும் சங்கரன்மற்றொரு விருந்துசெய்து, ஒருவருஷம் முடிந்ததும் நரேந்திரபுரிசென்று, அங்கே சுகமே வாழ்ந்தனர்.

பார்வதி அருந்ததியைப்போல் தமது பர்த்தாவுடன் இல்லறத்தை நடத்திக்கொண்டுவந்தாள். தான தருமம் செய்வதில் இவளுக்கு நிகரில்லை என ஜனங்கள் சொல்லிவந்தார்கள். மகா உத்தம ஸ்திரீரத்னம் எனப்பெயரெடுத்து வாழ்ந்துவந்தாள்.

ஈ. என். மரகதவேலு முதலியார்.

முற்றிற்று.

# சதாரம்.

## அங்கம்-௩. களம்-௨.

இடம்:—மாயோன் தர்பார் மண்டபம்

காலம்:—மத்தியானம்.

(மாயோன் பிரவேசித்தல்.)

மயோன்:—சேவகா, நம்முடைய மந்திரி இன்னும் ஏன் வரக்காணவில்லே. வழக்கமாக, நான் இச்சிம்மாசனத்தில் வீற்றிருக்கு முன்னதாகவே இங்கே வந்து எனது வரவை யெதிர்பார்த்துக் கொண்டிருக்கப்பட்ட நமது சுசிலர் இதுவரையில் இங்குவராது தாமதிக்கும் காரணம் யாதோ அறியேன். நல்லது அங்கேபோய் அவர் வருகிறாராவென்று பார்த்துவிட்டுவா. (சேவகன் போகிறான்) இதென்ன விந்தையாயிருக்கிறது. எனது இடது புருவங்களும், புஜங்களும் படபடவென்று துடிக்கின்றன. எனக்கு என்ன கஷ்டகாலம் வரப்போகிறதோ அறியேன். ஒருநாளுமில்லாத இந்த அபசகுனங்கள் எதற்காக ஏற்பட்டது. இதைப்பற்றி நமது சுசிலரிடத்தில் ஆலோசனை கேட்போமென்றால் அவரையும் காணவில்லே. நல்லது அவர் வந்தவுடன் இதைப்பற்றி ஆலோசிக்கலாம்.

(சேவகன் பிரவேசம்.)

சேவகன்:—மகாராஜா! மந்திரி அதோ வந்துகொண்டிருக்கிறார். ஆஜாரவாசலில் வந்து விட்டார்.

மயோன்:—மந்திரி வந்தவுடன் தாமதத்தின் காரணம் என்னவென்று கேட்டுக்கொள்ளுகிறேன். (தனக்குள்) எனக்கு ஏற்பட்ட அபசகுனங்களைப் பற்றியும் கேட்கிறேன்.

சுசிலன்:—ராஜன்! மங்களானிபவந்து.

மாயோன்:—மந்திரீ, தாங்கள் இவ்விடம் வருகிறதற்கு ஏன் இவ்வளவு காலதாமதமாய்விட்டது.

சுசிலன்:—ராஜன்! தாங்களுடைய குடையின் கீழுள்ள சிற்றரசர்களிடத்திலிருந்து வந்த அரசிறைப்பணங்களை வாங்கிப்பொக்கிஷத்தில் சேர்த்துவிட்டுவர இவ்வளவு காலமாய்விட்டது. தயவுசெய்து க்ஷமித்துக்கொள்ளவேணும்.

மாயோன்:—நல்லது, தங்களுடைய வார்த்தைகளைக்கேட்க மிக்க சந்தோஷமடைந்தேன். நமமுடைய தேசத்தின் விசேஷங்களை யறியவிரும்புகிறேன். ஆலயங்கள் தோறும் ஆறுகாலபூஜைகள் சரிவர நடந்துவருகின்றனவா. தான தருமங்கள் சரியானபடி செய்யப்படுகின்றனவா. இவைகளெல்லாம் விவரமாய்ச் சொல்லவேணும்.

சுசிலன்:—ராஜன்! ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படைபயிற்றல், பொருதல் என்று சொல்லப்பட்ட அரசாங்கத்திற்குரிய அறுவகை கர்மங்களோடு தாங்கள் ராஜ்ஜியத்தைச் செங்கோண்மை வழுவாது பரிபால

னஞ் செய்துகொண்டிருக்கையில், தங்களுடைய தேசத்தில் ஒரு குறைவு மேற்படமார்க்கமேயில்லை. தானங்களில் அதிக விசேஷமாயுள்ள அன்ன தானமென்ற தர்மத்தை, ஆங்காங்கு சத்திரங்கள், சாவடிகள் ஏற்படுத்தி, எவர்வந்தாலும் இல்லையென்று சொல்லாமல் சரிவர நடத்திவரத், தக்க ஆள்களை அவ்வவ்விடங்களில் நியமித்திருக்கிறோம். தவிர, யாசகம் என்ற வாக்கை இந்த தேசத்தில் வழங்காவண்ணம் நிர் மூலமாக்கிவிட்டோம். இருஷிகள் சரியாய் உபசரிக்கப்படுகின்றனர். ஆலயங்கள்தோறும் அறுவகை பூஜைகளும் பலவகையான உத்ஸவங்களும் குறைவில்லாமல் நடந்துவருகின்றன. யாகாதிகள் செய்வோர்களுக்கும் தகுந்த ஸகாயங்கள் செய்யப்படுகின்றன. இவைகளெல்லாவற்றையும் சரிவர நடத்துகிறார்களாவென்று, நான் இராக்காலங்களில் மாறுவேடம் பூண்டு நானே நேரில் பார்த்துக்கொண்டு வருகிறேன். மாதம் மும்மாரி தவறாமல் பெய்கின்றன. நாலுவர்ணத்தாரும் அவர்களுக்கேற்பட்ட தொழில்களைச் சரியாய் நடத்திவருகின்றனர். "நீரோங்க, நிலமோங்கும். நிலமோங்க, பயிரோங்கும். பயிரோங்க, குடியோங்கும், குடியோங்க கோலோங்கும்" என்றபடி குறைவில்லாது கூடியவரை தங்களுடைய தேசத்தைத் தாங்கள் செழிக்கும்படியாகச்செய்து வருகிறீர்கள். ஸர்வஜனங்களும் தங்களுக்குத்தெய்வம் தீர்க்காயுளைக் கொடுக்கவேண்டுமென்றும், தாங்கள் அவர்களை யிவ்விதமாகவே காப்பாற்றிக்கொண்டு வரவேணுமென்றும் ஈசுவரனைச் சதாகாலமும் பிரார்த்தித்துக்கொண்டிருக்கின்றனர்.

மயோன்:—மந்திரீ! தாங்கள் எனக்கு மந்திரியாக ஏற்பட்டு எனக்குத் தக்க சமயங்களில் ஆலோசனை சொல்லித்தந்து நான் ராஜ்ஜியபாரஞ்செய்கிறபோது, தாங்கள் மேலே சொல்லிய செழிப்பெல்லாம் நம்முடைய தேசத்திற்கு, வராமற்போகுமா. இன்றையதினம் தாங்கள் கூறியவிஷயங்களைக் கேட்டு மிகச்சந்தோஷமடைந்தேன். இன்னமொரு விஷயத்தைப்பற்றித் தங்களிடத்தில் வினவேண்டியிருக்கிறது. அதாவது, நம்முடைய தேசத்துக்கு வரப்பட்ட வித்வான்களையும், அபூர்வவஸ்துக்களைக் கொண்டுவரப்பட்ட வர்த்தகர்களையும் நமது சபைக்கு அழைத்துவந்து அவர்களுக்குத் தகுந்த ஸம்மானங்கொடுக்கவேண்டியது நம்முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட முக்கிய கடமையாயிருக்கிறது. அந்த விஷயம் கொஞ்சமாகிலும் பிசகன்னியில் சரிவர நடந்துகொண்டு வருகிறதா.

சுசிலன்:—ராஜன்! அந்த விஷயத்தில் கொஞ்சமாவது பிசகு ஏற்படவேயில்லை. இத்தேசத்தில் வந்த வித்வான்களிலும் வியாபாரிகளிலும் ஒருவராவது தகுந்த ஸம்மானம் வாங்காமல் போனதில்லை. இதற்காகவே, சேவகர்களை அரண்மனை வாசலில் நிற்கச்செய்து, அவ்விடத்தில் வரபபட்ட ஒவ்வொரு வித்வானையும், வர்த்தகனையும், தங்களுடைய சபைக்கு அழைத்து வரும்படியாக ஏற்பாடு செய்திருக்கிறேன்.

மாயோன்:—மந்திரீ! தங்களுடைய ஏற்பாடுகளைக் கேட்கக் கேட்க என் மனதில் சந்தோஷம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. தங்களிடத்தில் ஒரு ஆலோசனை கேட்கவேண்டியிருக்கிறது. நான் இன்றையதினம் இந்த தர்பாரில் வந்தவுடன் எனது இடது புருவங்களும் புஜங்களும் படபடவென்று துடித்தன. இப்பொழுதும் அவ்விதமேதுடிக்கின்றன. இதற்குமுன் ஒருதினமாவது இவ்விதம் நடந்ததில்லையே. இச்சகுனத்தின் பலன் என்னவென்று தயவுசெய்து சொல்வீராக.

சுசீலன்:—ராஜன்! எவருக்காவது துர்ச்சகுனங்கள் ஏற்பட்டால் உடனே அவருக்கு கெடுதிசம்பவிக்கிறது உலகவழக்கமாயிருக்கிறது. ஆனல் தங்களுடைய இராஜ்ஜியத்தை நீதிவழுவாது தாங்கள் ஆண்டு கொண்டு வருகிறபோது தங்களுக்கு ஒருகெடுதியும் ஏற்பட காரணமேயில்லை. ஆகையால் தங்களுக்கேற்பட்ட அபசகுனத்திற்கு ஒரு பலனுமில்லையென்று தோன்றுகிறது.

[ராஜவீதியில் புஷ்பாங்கதன் தன்பத்தினியால் கொடுக்கப்பட்ட பட்டுச்சவுக்கத்தைக் கையில்வைத்துக்கொண்டு அரண்மனையை நோக்கிவருகிறான், வருகிறபோது பின்வருமாறு சொல்லுகிறான்.]

புஷ்பாங்கதன்:—ஐயோ, என் கதி யிவ்விதமாய்விட்டதே. நான் என் நாயகியைத் தனியாகவிட்டு இரண்டு நாழிகைதூரம் வந்துவிட்டேன். சதாரம்! நீ எவ்விதம் தவித்துக்கொண் டிருக்கின்றனையோ, யான் உன்னை நடுக்காட்டில் தனியே விட்டுவர எவ்விதம் மனந்துணிந்தேன். நான் ஒரு கல்நெஞ்சனல்லவோ. நீயும் இந்தச் சவுக்கத்தைவிற்று வாருங்களென்று இலகுவாய்ச் சொல்லியனுப்பினய், நானும் இலகுவாய் வந்துவிட்டேன். நான் அடைகிற துன்பமோ என்னல் சகிக்கமுடியவில்லை. ஐயோ உன்னை நினைக்கிறபோது என் கண்ணீர் ஆருகப்பெருகுகிறது! என் வயிறு கொதிக்கிறது. என்செய்வேன், கடவுள்கூட ஏழையாகிய என்னைப் பரிசோதிக்கின்றாரே. தெய்வமே, நான் பிறந்த இடத்தையும், எனக்கு இப்பொழுது ஏற்பட்ட ஸ்திதியையும் நினைக்கிறபோது என் கண்களினின்றும் இரத்தத்துளிகள் சிந்துகின்றன. சதாரம்! நீயும் என்னை விவாகஞ்செய்துகொண்டு இந்தஸ்திதியையடைந்தாய், என்ன, வீணய்ப் புலம்புகிறேன். இதில் ஏதாவது பலனுண்டோ, நான் வந்தகாரியத்தை நிறைவேற்றிக்கொண்டு சதாரம் இருக்கப்பட்ட இடத்திற்குச் சீக்கிரம் போகிறேன். ஐயோ, எவ்விதம் அவள் தவித்துக்கொண் டிருக்கிருளோ, அறியேன். அந்தச் சவுக்கத்தைச் சாதாரண மனிதர்களிடத்தில் கொடுத்தால் தகுந்தவிலை கிடைக்கமாட்டாதென்றும், தனிகர்களிடத்திலோ அல்லது ராஜாக்களிடத்திலோ கொடுத்து அவரால் அளிக்கப்பட்ட வெகுமதியைப் பெற்றுக்கொண்டு வரவேணுமென்றும் சதாரம்உரைத்தாள். அவ்விதம்செய்ய இங்குவந்தேன். தனிகர்கள் யாரென்று யாரிடத்தில் கேட்கிறது எவ்விதமறிகிறது. ஆகையால் இதை இத்தேசத்து அரசனிடத்திலே கொண்டுபோகிறேன். இந்தப்பாதையைப் பார்த்தால் இது அரண்மனைக்குப் போகப்பட்ட பாதையாகத் தோன்றுகிறது. இதுவழியாகவே போகிறேன். அதோ பெரியமாளிகையொன்று தென்படுகிறது. அதைப்பார்த்தால் அரசனது அரண்மனையென்றே நிச்சயிக்கலாம். கிட்டநெருங்கி யாருடைய மாளிகையென்று விசாரிக்கிறேன், மாளிகையை நெருங்கிவிட்டேன். இதோ ஒரு சேவகன் காவலில் நிற்கிறான். இவனிடத்தில் விருத்தாந்தங்களை யறிந்து கொள்ளுகிறேன். சேவகனது சமீபம் வந்துவிட்டேன். இவனைக்கேட்கிறேன். நீர் யார் ஐயா தயவுசெய்து சொல்லவேணும்.

சேவகன்:—இந்த இடம் இத்தேசத்தரசனது அரண்மனை. நான் இந்த அரண்மனையிலுள்ள ஓர் சேவகன். நீங்கள் யார் ஐயா.

புஷ்பாங்கதன்:—நான் ஒருவியாபாரி. உங்களுடைய அரசனைக் காண வந்தேன். அவரைக் காணும்படியாக ஏற்பாடுசெய்தால், நான் உனக்கு அதிக நன்றி பறிதலுள்ளவனக இருப்பேன்.

சேவகன்:—தாங்கள் என்ன சரக்குகள் கொண்டுவந்திருக்கிறீர்கள்.

புஷ்பாங்கதன்:—நான் பட்டுவஸ்திரங்கள் கொண்டுவந்திருக்கிறேன்.

சேவகன்:—மகாராஜாவுடைய சபைக்குவாருங்கள். நான் அழைத்துக் கொண்டுபோகிறேன். என்னுடன் வாருங்கள்.

புஷ்பாங்கதன்:—அவ்விதமல்ல, முதலில் நீர் போய், அரசனது சமூகம் எப்படி யிருக்கிறதென்று அறிந்துவாரும். அதையறியாமல் நான்போகிறது சரியாயிராது.

சேவகன்:—இவ்விடத்தில் வித்வான்கள், வர்த்தகர்கள், யாராவது வந்தால் அவரைத் தடையன்னியில் உடனே ராஜசபைக்கு அழைத்துவரும்படியாக அரசனது ஆக்கினை இருக்கிறது. ஆகையால் நீங்கள் என் கூட வரலாம்.

புஷ்பாங்கதன்:—அரசனது ஆக்கினை எவ்விதமாயிருந்தாலும், அவரது சமூகம் எவ்வித மிருக்கிறதென்றறியாமல் போகிறது எனக்கு உசிதமாகத் தோன்றவில்லை. ஆகையால் அரசனது சமூகம் எவ்விதமிருக்கிறதென்று முதலில் அறிந்துகொண்டுவாரும்.

சேவகன்:—அவ்விதமே யாகட்டும். இவ்விடத்தில் தானே சற்று நில்லுங்கள். யான் க்ஷணப்பொழுதில் வந்து விடுகிறேன். (போகிறான்)

(அரசனது தர்பாரில் சேவகன் பிரவேசம்)

சேவகன்:—ராஜஸபைக்கு நமஸ்காரஞ்செய்கின்றேன்.

சுசிலன்:—என்னடா விசேஷம்.

சேவகன்:—அரண்மனை வாசலில் யாரோ ஒருவியாபாரி வந்திருக்கிறார். ராஜசமூகம் எவ்விதமிருக்கிறதென்று பார்த்துவரச்சொன்னார்.

சுசிலன்:—வியாபாரிகள் யார்வந்தாலும் அழைத்துக்கொண்டு வரவேணுமென்று நாங்கள் உத்திரவு செய்யவில்லையா? ஏன் அவ்விதம் அழைத்துக் கொண்டுவரவில்லை?

சேவகன்:—நான் அவ்விதமே அவரையழைத்தேன். அவரோ, இராஜசமூகம் எவ்விதமிருக்கிற தென்றறியாமல் அங்கேபோகிறது உசிதமல்லவென்று சொல்லி என்னை இங்கே அனுப்பினார். அவரைப்பார்த்தால் அவரை மன்மதனுக்குச் சமமாகச்சொல்லலாம். உயர் குடியிற்பிறந்தவராகத் தோன்றுகிறது.

சுசிலன்:—அவரைச்சீக்கிரம் அழைத்துக்கொண்டுவா (சேவகன்போகிறான்).

புஷ்பாங்கதன்:—இதோ சேவகன் திரும்பிவருகிறான். அவன்கொண்டுவரப்பட்ட செய்தியைக்கேட்போம். சேவகரே, நல்லசெய்திதானா.

சேவகன்:—ராஜாவும் மந்திரியும், தங்களை யழைத்துவரும்படி சொன்னார்கள். சீக்கிரம் வாருங்கள், அழைத்துக்கொண்டு போகிறேன் (இருவரும் போகிறார்கள்.

(தர்பார் மண்டபத்தில் புஷ்பாங்கதன் பிரவேசம்.)

புஷ்பாங்கதன்:—ராஜன்! தங்களுக்கும் இந்த ஸபையிலுள்ளோர்க்கும் வந்தனமளிக்கின்றேன்.

வி. கோபால ஐயங்கார், பி. ஏ.